''டாகுமெண்டேஷன்'' பற்றி சென்னை பச்சையப்பன்
கல்லூரி ஆராய்ச்சி மாணவர்களுடன் நூலக ஞானி
டாக்டர் பா. பெருமாள் கலந்துரையாடும் காட்சி (1971)

நூலகம்

இலக்கியம்

மலர் 1 இதழ் 8 ஏப்ரல், 1996

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly March, 1996
Regd No. TN / MS (N) / 922 R.Dis 4441 / 95.E

சிறுகதை மன்னர் ஜெயகாந்தன் அவர்களுக்கு அண்மையில் சாகித்திய அகாடெமி சிறப்பு விருது வழங்கியது. அவருடைய வீட்டிற்குச் சென்று அளித்த பாராட்டு. தொழில் அதிபரும் சிறந்த இலக்கிய ஆர்வலருமான, ஆதம்பாக்கம் வே. திருநாவுக்கரசு அவர்கள் பொன்னாடை அணிவிக்கிறார். உடனிருப்பவர் முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள்.

அட்டை அச்சிட்டோர் :
மெட்ரோ பிரிண்டர்ஸ் & பேக்கேஜிங் இண்டஸ்டிரி சென்னை-29. ✆ 420345

''டாகுமெண்டேஷன்'' பற்றி சென்னை பச்சையப்பன்
கல்லூரி ஆராய்ச்சி மாணவர்களுடன் நூலக ஞானி
டாக்டர் பா. பெருமாள் கலந்துரையாடும் காட்சி (1971)

நூலகம்

இலக்கியம்

மலர் 1 இதழ் 8 ஏப்ரல், 1996

திருக்குறள். ஆங்கில மொழிபெயர்ப்புடன்,

Tirukkural with English Translation

DREW (Rev) and LAZARUS (John). 1995.

Q. + 293. Rs. 25.

Manivasagar Pathippagam

8/7, Stinger Street, Parrys,

Madras - 600 108. Phone 561039



Dr. S.Meyyappan

Of all the thinkers of the world who showed mankind a higher way of life Sage Thiruvalluvar, as one such, stands outstandingly. Thirukkural, the master piece of the Sage, as a literature lights the way of life to humanity wherever they live and whatever occupation they engaged in.

The speciality of this great work is that it is above all cults and religions, that it gets impressed in the heart of readers, rich in literature and infuses new ideas in every period of time.

Kural, in exquisite poetic form, is a couplet containing complete and striking idea expressed in a refined and intricate metre. No translation can convey an idea of its charming effect. Efforts are, however made to bring out the Sage's true idea in this translation. It is primarily intended to make the Tamil classic easier to non-Tamil students, while to the natives it may afford a more comprehensive study of their great classic author.

கண்ணாடி + ஊஞ்சல் உற்சவ சேவை

9–5–1996 வியாழன் காலை 7.30 மணி முதல் 8.30 வரை 6, மு.வ. தெரு, அரும்பாக்கம், சென்னை – 600 106. தொலைபேசி : 484 5034 நடைபெற உள்ளது.

61 தம்பதியர்கள் மனமுவந்து கலந்து கொள்ள இசைந்துள்ளனர்.

தாங்களும் கலந்து கொண்டு மகிழலாமே!

உள்ளம் வயது: 16; உடல் வயது: 61.

தமிழக நூலக இயக்கதிற்கு தம்மை முழுமையாக அர்ப்பணிக்கிறார்.

திரு. சி. மெய்யூர் அமரர் பட்டம்மாள் பார்த்த சாரதி பெருமாள் அவர்கள் கோவை மரகதம் ராமசாமி, திருமதி. இந்திராவுடன்.

தாங்களும் வந்து வாழ்த்துங்களேன்!

தன் படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்த

தாய் மாமன் திருவண்ணாமலை (6, பழைய கார்கானா தெரு) உயர்திரு. அமரர் டி.வி. ஷண்முக நாயக்கருக்கு இத்தருணத்தில் புகழஞ்சலியை காணிக்கையாக்குகிறார்.

இவண்

மகன்கள் – மகள்கள் – மருமகன்கள் – மருமகள்கள் – பேரன் – பேத்திகள்

(வி-ம்)

டாகுமெண்டேஷன்

- அறிச்சுவடி அறிஞர்

அறிஞர் ஆட்லெட் (OTLET), *1907 இல் 'டாகுமெண் டேஷன்' என்ற சொல்லை முதன்முதலில் நூலகத் துறையில் பயன்படுத்தினார்.* Bibliographie et de documentation *என்பது பதப்பிரயோகமாகும்.*

இன்று Information analysis*—க்கும் மேலே வளர்ந்து விட்டது.*

Recording, Organization and Dissemination of specialized knowledge. THE JOURNAL OF DOCUMENTATION. Quarterly June, 1945 London (Aslib),

The establishment, identification collection and use of documents.

A.L.A. Glossary of Library terms by E.H. Thompson 1966. P.48.

Dr. S.R. Ranganathan's definition on DOCUMENTATION

1. Promotion and Pratice of bringing into use of nascent micro thought by specialists (Law 1); and
2. Pin - pointed (Law 2);
3. Exhaustive (Law 3);
4. Expeditious (Law 4) service of nascent micro thought to specialists;
5. In spite ofthe continuous ever - increasing cascade (Law 5) of nascent micro thought on an ever multiplying number of specialised subjects, communicates through several thousands of periodicals.

(Documentation and its facts. 1963. Page 46.)

THOMAS LANDAU. Ed.

Encyclopaedia of Librarianship. Ed.3 1967. P153.

(L.M. HARROD, Compo. The Librarians glossary. Ed 3. 1971. Pages 223-4.

Documentation

1. The act of collecting, classifying and making readily accessible the records of all kinds of intellectual activity.

2. The recording of knowledge and the sources of knowledge, organizing such records systematically so that they may be found quickly, and disseminating by various means both the knowledge and the sources of the knowledge.

3. The recording, organization and dissemination of specialized knowledge (Aslib).

4. The science of collecting, storing and organizing recorded informational materials or documents for optimum access.

5. Includes the activities which constitute special librarianship plus the prior activities of preparing and reproducing materials and the subsequent activity of distribution.

6. The selection, classification and dissemination of information.

7. The science of ordered presentation and preservation of the records of knowledge serving to tender their contents available for rapid reference and correlation.

8. The procedure by which the accumulated store of learning is made available for the further advancement of knowledge.

9. The art of facilitating of use of recorded, specialized knowledge through its presentation, reproduction, publication, dissemination, collection, storage, subject analysis, organization, and retrieval.

10. Collection and conservation, classification and selection, dissemination and utilization of all information (IBM).

11. The designation of the total complex of activities involved in the communication of specialized information including the activities which constitute special librarianship plus the prior activities of preparing and reproducing materials and the subsequent activity of distribution. (Mortimer Taube)

12. The group of techniques which are necessary for the ordered presentation, organization and communication of recorded specialized knowledge, in order to give maximum accessibility and utility to the information contained. (J.D. MARK and R.S TAYLOR)

13. The identification, the investigation, the assembling and the use of documents (French Union of Documentation Services).

நன்றி: சென்னைப் பல்கலைக்கழக அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம். நூலகம் தகவல் அறிவியல் சான்றிதழ் படிப்பு. பாடத் தொகுப்பு. 3.

சிறப்பு வாய்ந்த நூலகங்கள், தற்காலத்தில் "சரியான வாசகருக்குச் சரியான (அவர் விரும்பும்) நூலை சரியான நேரத்தில்" கிடைக்கச் செய்ய ஒரு சேவைப் பிரிவை ஏற்படுத்தியிருக்கின்றன. இப்பிரிவு படிப்பவர்களுக்கு வேண்டிய செய்திக் குறிப்புகளைத் தந்து சேவை செய்வதால் இப்பிரிவை "குறிப்புத் தரும் சேவைப் பிரிவு" (Reference Service Section) என்று குறிப்பிடலாம். இதில் பணிபுரியும் நூலகரை அல்லது அலுவலரை, குறிப்புத்தரும் நூலகர் (Reference Librarian) அல்லது குறிப்புத்தரும் அலுவலர் (Reference Staff) எனவும் அழைக்கலாம். இவர் கடமை யாதெனில் படிக்கத் தெரிந்தவர்களை மென் மேலும் நூல்களைப் படிக்கத் தூண்டச் செய்வது மட்டுமின்றி நூல்களுக்கும் அவைகளை நாடிவரும் வாசகர்களுக்கும் இடையே இணைக்கும் பாலமாக விளங்குவதேயாகும். இச் சேவையை நாம் விற்பனையாளரின் சேவையுடன் ஒப்பிடலாம்.

குறிப்புத்தரும் சேவை சிறு விளக்கம் (Definition and Meaning)

ஜேம்ஸ் வீனர் (James Wyner) என்பவர், குறிப்புத்தரும் சேவையை நூலக நிர்வாகத்தின் ஒரு பகுதி என்றும் நூலகத்தி

லுள்ள நூல்களைப் பயன்படுத்துவதில் வாசகர்களுக்கு அளிக்கப்படும் உதவி என்றும் கூறுகிறார்.

எஸ்.ஆர். ரங்கநாதன் குறிப்புத்தரும் சேவை என்பது ஒரு தனிப்பட்ட முறையில் (Personal way) படிப்பவரையும் அவர் விரும்பும் நூல்களையும் தொடர்புபடுத்துவதேயாகும் என்கிறார்.

அட்சின்ஸ் (Hutchins) என்பவர் நூலகத்தில் செய்திக் குறிப்புகளைத் தேடுபவர்களுக்கு அக்குறிப்புகளை எவ்வளவு எளிதில் கிடைக்கும்படி, ஒருதனிப்பட்ட முறையில், உதவி செய்ய முடியுமோ அதையே குறிப்புத்தரும் சேவை என்கிறார்.

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து குறிப்புத்தரும் சேவை என்பது நூலக நிர்வாகத்தின் ஒரு பிரிவு என்று அறிகிறோம். அதாவது படிப்பவர்களின் தேவையை நன்கு அறிந்து கொண்டு அவர்களுக்கு வேண்டிய நூல்களையும் குறிப்புகளையும் தேர்ந்து தேடிப்பெற்று, ஒழுங்குபடுத்தி வேண்டியபோது அவைகளைக் கிடைக்கும்படி செய்வது நூலகப் பணியாகும். மேலும் இப்படிப்பட்ட பணியில் சாதாரணச் செய்தி, நுண்ணிய செய்து இவைகளை வழங்குதலும், ஆவணங்களைத் தேடுவதில் உதவி செய்தலும், குறிப்புதரும் நூல்களைக் கையாள்வதில் உதவி செய்தலும், வேண்டிய குறிப்புகளைத் தேடி பட்டி தயாரித்து (Bibliography) அல்லது சுருக்கக் குறிப்புகளை (Abstracts) தயாரித்துத் தருவதும், நகல் எடுத்துக் கொடுப்பதும் மேலும் மொழிபெயர்ப்புச் செய்தியை அளித்து உதவுதல் போன்றவைகளும் அடங்கும். சுருங்கக் கூறின் குறிப்புத்தரும் நூலகர் என்ன வேலைகளைச் செய்கிறாரோ அதையே குறிப்புத்தரும் சேவை எனலாம்.

குறிப்புத்தரும் சேவையை நாடும் வாசகர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது அவர்களை (1) சாதாரண வாசகர்கள் (General Readers) என்றும் (2) சிறப்பியலாளர்கள் (Specialists) என்றும் பிரிக்கலாம்.

சாதாரண வாசகர்களுக்கு வேண்டிய செய்திகள் பொதுவாக எளிமையானதாகவும் மிக முக்கியமானதாக இல்லாதவைகளாகவும் இருக்கும். மேலும் அவர்களுக்கு வேண்டிய செய்திகள் குறிப்புத்தரும் நூல்களில் (Reference Books) எளிதில் கிடைப்பதால் குறிப்புத்தரும் சேவை அளிப்பதில் சிரமம் இருப்பதில்லை. ஆனால் சிறப்பியலாளர்களுக்குத் தேவையான செய்திக் குறிப்புகள் மிகவும் சிக்கலானவையாகவும் முக்கியமானதாகவும் நுண்ணியதாகவும் இருப்பதால் அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான குறிப்புகளை மிகக்

கவனமாகத் தர வேண்டும். அதற்காக அவர்களின் தேவையை ஐயமின்றி நன்கு அறிதல் வேண்டும். மேலும் அவர்களுடன் நன்கு பழகி நண்பனாகவும், வழிகாட்டியாகவும் மேதையாகவும் இருந்து பல கேள்விகள் மூலமாக அவர்களுக்கு வேண்டிய நுட்பமான செய்திக் குறிப்பை அறிதல் வேண்டும்.

அதன் பின் அவர்கள் மன நிறைவு அடையும் வரை குறிப்புத் தரும் சேவையைத் தொடர்ந்து அளித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

படிக்கும் நூல்களின் தன்மை

நாம் படிக்கும் நூல்கள் புத்தக வடிவிலும், பருவ இதழ்கள் வடிவிலும், தினசரி செய்தித்தாள்களாகவும் ஆய்வுக் கட்டுரைகளாகவும், அச்சில் வராத ஏடுகளாகவும் (Preprints) மறு அச்சுப்பதிப்புகளாகவும் (Reprints) அறிக்கைகளாகவும் (Reports) இன்னும் பல வடிவங்களில் இருக்கின்றன. இதனின்று வேறுபட்ட வடிவில் படச்சுருள்கள் (Film Roll), மின்காந்தப் பதிவுநாடாக்கள் (Magnetic Tape), வரைபடங்கள் (Drawings), நிலப்படங்கள் (Maps) நுண்ணிய வடிவில் செய்திகளைப் பெற்றிருக்கும் அட்டைகள் (Micro-Cards) இவைகளையும் நூல்களாகக் கருதலாம். இத்தகைய பலதரப்பட்ட வடிவிலிருக்கும் நூல்களைப் பொதுவாக ஆவணங்கள் (Documents) என்று நூலகவியலில் சொல்லப்படுகிறது.

பொதுவாக நாம் பயன்படுத்தும் நூல்களை (1) பாடநூல்கள் (Subject Books) என்றும் (2) குறிப்புத்தரும் நூல்கள் (Reference Books) என்றும் பிரிக்கலாம். பாடநூல்களில் பாடத்தைப் பற்றிய செய்திகள் தொடர்ச்சியாக இருப்பதால் அவைகளை நாம் தொடர்ந்து படிக்கிறோம். ஆனால் குறிப்புத்தரும் நூல்களில் பல தரப்பட்ட செய்திக் குறிப்புகள் விரிவாகத் தரப்பட்டு, செய்திகள் அகரவரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே நாம் அவைகளைத் தொடர்ந்து படிப்பதில்லை. சில முக்கிய செய்தி விளக்கங்களுக்காக மட்டும் அவைகளைப் பயன்படுத்துகிறோம்.

இப்படிப்பட்ட குறிப்புத்தரும் நூல்கள் பல வகையில் உள்ளன. உதாரணமாக, அகராதிகள் (Dictionaries), கலைக்களஞ்சியங்கள் (Encyclopaedias), கையேடுகள் (Hand Books), ஆண்டுப் புத்தகங்கள் (Year Books), அட்டவணைகள் (Tables), நெறிகாட்டிகள் (Directories), சொல் மற்றும் வாக்கியப்பட்டிகள் (Concordance), நூல் பட்டியல் (Bibliographies), வாழ்க்கை வரலாற்று நூல்கள் (Biographical sources), நில வரலாற்று நூல்

கள் (Geographical sources) போன்றவைகளைக் கூறலாம். இத்தகைய குறிப்புத் தரும் நூல்கள் குறிப்புத்தரும் சேவைப் பிரிவில் இருத்தல் வேண்டும். ஒரு நூலகத்திற்கு வேண்டிய குறிப்புத்தரும் நூல்கள் அந்நூலக வாசகர்களின் தரத்தையும், நூலகத்தின் வகைகளையும், நூல்களின் எண்ணிக்கை ஆகியவைகளையும் பொறுத்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

குறிப்புத்தரும் சேவையின் வகைகள்

குறிப்புத்தரும் சேவையின் நோக்கம் சரியான நேரத்தில் ஒரு குறிப்பிட்ட வாசகருக்கு அவர் விரும்பும் சரியான நூலையோ அல்லது நூல்களையோ அல்லது செய்திக் குறிப்புகளையோ கிடைக்கும்படி செய்வதாகும். இதில் கூறிய "சரியான நேரத்தை" விளக்க வேண்டுமானால் கால அளவைக் கூறியாக வேண்டும்.

குறித்த நூலோ அல்லது செய்திகளோ வாசகர்களுக்கு உடனே கிடைத்தால் மிகவும் நல்லது. அதாவது, அவைகளை சில நொடிகளில் அல்லது 5 நிமிடங்களுக்குள் அல்லது ஒரு மணி நேரத்திற்குள் கிடைக்கும்படி செய்தால் அத்தகைய சேவை உடனடிக் குறிப்புத்தரும் சேவை (Ready reference service) என்று நூலகவியலில் சொல்லப்படுகிறது. அவ்வாறன்றி வாசகர்களுக்கு வேண்டிய செய்திக் குறிப்புகளைத் தேடி தொகுத்தளிக்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டால், உதாரணமாக நாள், வாரங்கள், மாதங்களாகவோ அல்லது தொடர்ந்து சேவை செய்து வந்தாலோ, அதை நாம் தொடர் குறிப்புத்தரும் சேவை (Long range reference service) என்று குறிப்பிடுகிறோம்.

எனவே குறிப்புத்தரும் சேவையின் கால அடிப்படையில் அதை (1) உடனடிக் குறிப்புத்தரும் சேவை என்றும் (2) தொடர் குறிப்புத்தரும் சேவை என்றும் பிரிக்கலாம். சேவையின் மூலமாக நூலக நோக்கங்களை (Library objectives) நிறைவேறச் செய்வதால் குறிப்புத்தரும் நூலகரை, நூலகத்தின் கல்தூண் என்று குறிப்பிட்டாலும் மிகையாகாது.

தொடர் குறிப்புத்தரும் சேவை (Long-range reference service)

குறிப்புத்தரும் சேவையின் நேரம் நீண்டுகொண்டே சென்றால் அது நீண்ட காலக் குறிப்புத்தரும் சேவை எனலாம். ஆனால் காலம் நீட்டினாலும் சேவையைத் தொடர்ந்து அளிப்பதால் இத்தகைய சேவையைத் தொடர் குறிப்புத்தரும் சேவை என்றழைப்பதே சாலச் சிறந்ததாகும்.

தொடர் குறிப்புத்தரும் சேவை ஏன் அதிக நேரத்தை எடுத்துக் கொள்கிறது என ஆயுங்கால் நமக்குத் தெரிவதாவது: வாசகர்களுக்கு வேண்டிய மனநிறைவுதரும் குறிப்புத் தகவல் களை உடனே கொடுக்க இயலாமைதான் காரணம். மேலும் வாசகர்களின் தன்மை, அவர்களது சிக்கலான கேள்விகள் மற்றும் அவைகளுக்காக வேண்டிய சரியான குறிப்புகள் அடங்கிய நூல்களை அறிந்து தேடுவதில் ஏற்படும் காலதாமதத்தினாலும் மற்றும் அப்படிப்பட்ட குறிப்புகள் மிகச் சமீப காலத்தில் வெளி வந்திருக்கும் நூல்களில் இருப்பதாலும் உடனே சேவையை அளிக்க முடிவதில்லை. சில சமயங்களில் குறிப்புகளடங்கிய நூல்கள் பிற நூலகங்களிலோ அல்லது, தேசிய நூலகம் மற்றும் தேசியத் தகவல் மையங்களிலோ இருக்கலாம். அங்கிருந்து அவைகளைப் பெறுவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு மேலாகச் சேவை அளிக்கும் முறையைப் பொறுத்தும் காலதாமதம் ஏற்படுகிறது.

பொதுவாக, தொடர் குறிப்புத்தரும் சேவையை நாடும் வாசகர் சாதாரண மக்கள் அல்லர். அவர்கள் ஆய்வு செய்வோராகவும், விஞ்ஞானியாகவும், முடிவு செய்யும் (decision making) மற்றும் திட்டமிடுபவர்களாகவும், பாடத்துறைகளில் நிபுணர்களாகவும் இருக்கலாம். இவர்களின் காலம் பொன்னானது. மேலும் அவர்களுக்கு வேண்டிய குறிப்புகள் நுட்பமானவைகளாகவும் சமீப காலத்தில் தோன்றியவைகளாகவும் இருக்கும். எனவே அப்படிப்பட்ட செய்திக் குறிப்புகளைத் தேடிக் கண்டுபிடித்துப் படிப்பதில் அதிக நேரம் வீணாகிறது. எனவே இவர்கள் குறிப்புத்தரும் நூலகரின் சேவையை நாடுகின்றனர். அவர்களுக்கு வேண்டிய `குறிப்புகளை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின் தொடர்ந்து சேவையளித்து வந்து அவர்கள் மனநிறைவு அடையும்படி செய்தலே தொடர் குறிப்புத்தரும் சேவையின் நோக்கமாகும். இதனால் வாசகர்களின் குறிப்புத்தேடும் பணியில் விரயமாகும் காலத்தை அவர்கள் ஆக்கப் பணியில் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இருக்கிறது.

வாசகர்களின் கேள்விகளை ஆராயுங்கால், அவைகள் நுட்பமானதாகவும், கருத்தாழம் மிக்கதாயும் சிக்கலானவையாகவும் சமீபத்தில் தோன்றிய செய்திகளைச் சார்ந்ததாகவும் இருக்கின்றன. எனவே அவைகளுக்கு எளிதில் விடையளிக்க முடிவதில்லை. அவ்வித செய்திக் குறிப்புகளை பருவ இதழ்களிலும், ஆய்வுக் கட்டுரைகள், பட்டி பருவ இதழ்கள் (Indexing periodicals) மற்றும் கருத்துச் சுருக்கம் தரும் பருவ இதழ்கள் (Abstracting periodicals) மற்றும் பிற ஆய்வுக் கூடங்களிலிருந்து வெளியிடப்படும் முன்பதிப்பு (Pre print) அல்லது சொந்தப்

பயனுக்காக வெளியிடப்படும் பருவ இதழ் (Private circulation) ஆகியவைகளிலிருந்தும் திரட்டித்தர வேண்டியிருப்பதால் நீண்டகாலம் ஏற்படுகிறது.

கீழ்க்கண்ட கேள்விகளின் தன்மையை ஆராய்ந்தால் குறிப்புகளைத் திரட்டுவதில் எவ்வளவு சிரமம் மற்றும் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை உணரலாம்.

1. லேசர் (LASER) ஒளிக்கற்றை மருத்துவத்தில் என்ன மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது? புற்று நோயில் குறிப்பாக எவ்வாறு அதைக் கையாளலாம்?

2. தற்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்களை எவ்வாறு தீர்க்கலாம்?

3. சூரிய சக்தியை (Solar energy) எவ்வாறு பெறலாம்? இது வரைக்கும் செய்துள்ள ஆய்வுகள் எந்த அளவில் இருக்கின்றன?

4. ரபோத் (Rabot) என்ற எந்திர மனிதனை அணு உலையில் வேலைகள் செய்விக்க எப்படித் தயாரிக்கலாம்?

5. விண் ஆராய்ச்சியில் எந்த அளவிற்கு இந்தியா முன்னேறியுள்ளது?

6. யுரேனியம் அணுசக்தியை வெளிப்படுத்த எப்படித் தயாரிக்க வேண்டும்? இதுவரைக்கும் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடித்த முறைகளைப் பற்றிய செய்திகள் வேண்டும்.

இவ்விதக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நூலகரின் திறமையும் முக்கியமானது. தொடர் குறிப்புத்தரும் நூலகர் எல்லாக் கலைகளிலும் வல்லவராகவும் சேவை செய்யும் மனப்பான்மை கொண்டவராகவும் புதிய கருத்துக்களை அறிய மிகவும் ஆர்வம் கொண்டவராகவும் அவைகளைப் பற்றிய செய்திகளை சேகரித்துப் பிறருக்குக் கிடைக்கும்படி செய்தும் பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டும், ஆய்வுத்தாள்களை எழுதியும் சேகரித்தும் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ப வராகவும் இருக்கவேண்டும். இத்துடன் பல ஆய்வுக்கூடங்களில் வேலை செய்யும் விஞ்ஞானிகளுடனும் நிபுணர்களுடனும் தொடர்பு உடைய நூலகரே இவ்விதச் சேவைக்குப் பொறுத்த மானவராவார். அப்படிப்பட்ட நூலகர் தொடர் குறிப்புத்தரும் சேவையை, தன் திறமையினால் உடனடிக் குறிப்புத்தரும் சேவையாக மாற்றிவிடலாம். மேலும் செய்திகளைத் தேடிப்

பெற்று அவைகளை முறைப்படுத்தும் கலையில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். சேகரித்த குறிப்புகளை வாசகர்களுக்குப் புரியும் வகையில் தொகுத்து அளிப்பதில் திறமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

தொடர் குறிப்புத்தரும் சேவையின் தன்மை வாசகர்கள், அவர்களின் குறிப்புத்தேவை, குறிப்புத்தரும் நூல்களின் தரம் இவைகளைப் பொறுத்து இருக்கிறது. பொதுவாக இச்சேவை கீழ்க்கண்ட முறையில் அளிக்கப்படுகிறது:

1. நூற்பட்டிச் சேவை (Bibliographic service)

2. அட்டவணை மற்றும் கருத்துப் பொருள் சுருக்கத் தொகுப்புச் சேவை (Indexing and abstracting service)

3. மொழிபெயர்ப்புச் சேவை (Translation service)

4. நகலெடுத்து வழங்கும் சேவை (Reprographic service)

5. நடைமுறை அறிவாற்றல் தொகுப்புச் சேவை (Current Awareness service)

6. தேர்ந்தெடுத்து கருத்துப்பொருள் செய்திகளைத் தரும் சேவை (Selective Dissemination of Information service)

1. நூற்பட்டிச் சேவை (Bibliographic service)

வாசகர்களின் விருப்பத்திற்கேற்ப அவர்கள் வேண்டும் போதோ அல்லது அவர்கள் விருப்பத்தை முன்கூட்டியே அறிந்தோ நூற்பட்டி சேவை செய்யப்படுகிறது. நூற்பட்டி என்பது வாசகர்களுக்குத் தேவையான செய்திக் குறிப்பு களடங்கிய நூல்களை அகரவரிசையிலோ கருத்துப் பொருள் குறிக்கும் சொற்களின் தலைப்புப்படியோ ஒழுங்கு செய்து தொகுத்துத் தருதலேயாகும். இதுமட்டுமின்றி ஒவ்வொரு வாசகருக்கும் தனித்தனியாக ஒரு வாசக நூல்பட்டி தொகுத்து வழங்குதலும் உண்டு. இச்சேவை கல்லூரி மற்றும் பல்கலைக் கழக நூலகங்களில் பெரும்பான்மையாக மேற்கொள்ளப் படுகிறது. நூலகங்களைப் பயன்படுத்துவோருக்கு இச்சேவை ஒரு பொதுத்தன்மை வாய்ந்ததாக அமையும்.

2. அட்டவணை மற்றும் கருத்துப்பொருள் சுருக்கத் தொகுப்புச் சேவை (Indexing and abstracting service)

இச்சேவை பாடத் துறைகளில் நிபுணராக இருப்பவர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்காகவும் ஏற்படுத்தப் பட்டதாகும். அட்டவணைப்படுத்தும் சேவை என்பது வாசகர்களுக்கு வேண்டிய குறிப்புத் தலைப்புக்களுக்கேற்ற செய்திகளை, பருவ இதழ்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தொகுத்துத் தருதலேயாகும். அத்தொகுப்பில் ஆசிரியரின் பெயர், கட்டுரைத் தலைப்பு மற்றும் பருவ இதழின் தலைப்பும் பகுதி எண் (Volume Number), பக்க எண் முதலியவைகளும் கொடுக்கப்பட்டிருக்கும்.

கருத்துப் பொருள் சுருக்கத் தொகுப்புச் சேவை என்பது அட்டவணைப்படுத்தும் சேவையின் விரிவாகும். இதில் ஒவ்வொரு பதிப்பிலும் (Entry) ஆசிரியர் பெயர், கட்டுரைத் தலைப்பு கட்டுரையைப் பெற்றுள்ள பருவ இதழின் தலைப்பும், பகுதி (Volume) எண் மற்றும் பக்க எண் முதலியனவும் கொடுத்த பின், கட்டுரையில் கொடுக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கும். இதனால் கட்டுரை முழுவதும் படிக்காமலேயே அதில் என்ன கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை எளிதில் அறிய முடிவதால் வாசகர்களின் கட்டுரை படிக்கும் நேரம் வெகுவாகக் குறைந்து அந்நேரத்தைப் பயனுள்ள ஆராய்ச்சிப் பணிகளில் பயன்படுத்த முடியுமல்லவா? இப்படிப்பட்ட சேவை பல்கலைக் கழக மற்றும் ஆராய்ச்சி நிறுவன நூலகங்களில் அளிக்கப்படுகிறது.

3. மொழிபெயர்ப்புச் சேவை (Translation Service)

ஆராய்ச்சிக் கட்டுரைகள் தற்காலத்தில் ஆங்கில மொழியைத் தவிர்த்து பிற அயல்நாட்டு மொழிகளிலும் எழுதி வெளியிடப்படுகின்றன. உதாரணமாக சோவியத்நாடு, ஜெர்மனி, பிரான்ஸ், சீனா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தங்கள் தாய்மொழியிலேயே எழுதி வெளியிடுகின்றன. இத்தகைய கட்டுரைகளும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகளுக்கு வேண்டியிருக்கிறது. ஆனால் மொழிச்சிக்கலால் அவைகளைப் படிக்க முடிவதில்லை. இத்தகைய சிக்கலை நீக்குவதற்காகவே மொழிபெயர்ப்புச் சேவை நூலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இத்தகைய சேவையின் நோக்கம் கட்டுரைகளைப் படிப்பதில் ஏற்படும் மொழிச்சிக்கலை அகற்றுவதேயாகும். மொழிபெயர்ப்புச் சேவைப் பிரிவு நம் நாட்டில் இந்திய தேசிய அறிவியல்

ஆவண மையத்தில் (Indian National Scientific Documentation Centre) INSDOC காணலாம். இதன் மூலமாக நூலகங்கள் மொழிபெயர்த்த கட்டுரைகளைப் பெற்றும் அல்லது உள்ளூரிலேயே மொழி பெயர்த்தும் வாசகர்களுக்குச் சேவை செய்யலாம். இத்தகைய சேவைப் பிரிவு முக்கியமாகப் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சிக் கூடங்களின் நூலகங்களிலும், தேசிய தகவல் மையங்களிலும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

4. நகலெடுத்து வழங்கும் சேவை (Reprogrophic Service)

நகலெடுத்து வழங்கும் சேவை என்பது வாசகர்களுக்கு வேண்டிய முக்கியமான செய்திகளடங்கிய கட்டுரைகளையும் சிக்கலான படங்கள் மற்றும் சமன்பாடுகள் இவைகளையும் நிழற்படக் கருவி மூலம் நகல் எடுத்துக் கொடுத்தலாகும். இது ஆராய்ச்சியாளர்களின் நேரத்தை மிச்சப்படுத்துகிறது. இச் சேவையும் அதற்கான பிரிவும் பல்கலைக்கழகம், ஆராய்ச்சி நிலைய நூலகங்களில் இருக்கின்றன. இந்தியாவில் இச்சேவை இந்திய தேசிய அறிவியல் ஆவண மையத்திலும் (INSDOC) இன்னும் பல இடங்களிலும் வாசகர்களுக்காகவே அளிக்கப்படு கிறது.

5. நடை முறை அறிவாற்றல் தொகுப்புச் சேவை (Current Awareness Service)

இத்தகைய சேவை ஆய்வுக்கூடங்களில் பணிபுரியும் ஆய்வாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இச்சேவை சமீப காலத்தில் நடைமுறையிலிருக்கும் செய்திகளை ஆவணங்க ளிலிருந்து பெற்று தொகுத்து அவைகளை ஆய்வாளர்களின் பார்வைக்குக் கொண்டு வருவதற்காகவே ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனால் வாசகர்கள் சமீபகாலத்தில் நிகழ்ந்த செய்திகளைப் பெற்று அறிவு வளர்ச்சி பெறுகின்றனர்.

6. தேர்ந்தெடுத்து கருத்துப்பொருள் செய்திகளைத் தரும் சேவை (Selective Dissemination of Information)

இச்சேவை ஒவ்வொரு வாசகருக்கும் தனிப்பட்ட முறை யில் சரியான செய்திகளைத் திரட்டி ஒன்று சேர்த்து அளிப் பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆய்வு தொடர்புடைய கருத்துப் பொருள் செய்திகள், நூலகத்திற்கு வரும் நூல்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன. இவ்வித ஆவணத் தொகுப்பை ஆவணக் கோப்பு (Document profile)

என்கிறோம். தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு வாசகருக்கு வேண்டிய செய்திக் குறிப்புகளைக் கொண்டு வாசகர் கோப்பு (Reader's profile) தயாரிக்கப்படுகிறது. இக்கோப்பில் ஒவ்வொரு வாசகருக்கு ஒரு தாள் (Sheet) கொடுக்கப்பட்டு அவருக்கு வேண்டிய செய்திக் குறிப்புச் சொல்லைத் தலைப்பாக வைத்து வாசகக் கோப்பு தயாரிக்கப்படுகிறது. முறையான இடை வெளியில் அதாவது 14 நாட்களுக்கு ஒருமுறை இவ்விரு தொகுப்புகளை ஒப்பிட்டுத் தேவையான செய்திகள் வாசகருக்குத் தேர்ந்தெடுத்து அளிக்கப்படுகின்றன. இச்சேவை யில் வாசகரும் தனக்கு வேண்டிய புதிய செய்திகளையோ அல்லது மாற்றங்களையோ இணைக்கச் சொன்னால் அத்த கைய யோசனைகளை ஏற்று அவ்வாசகர் தாளில் தக்க மாற்றம் செய்து எதிர்காலச் சேவை அளிக்கலாம். இம்முறையில் வாசகர் கருத்தும் யோசனையும் பெற்று வாசகர் கோப்பை தக்க முறையில் வைத்துக் கொள்ள முடிவதால் இச்சேவை மிகவும் விரும்பப்படுகிறது. இவ்விதச் சேவையை பல்கலைக் கழகம், ஆய்வு நிலையங்கள் மற்றும் ஆய்வு வளர்ச்சி மையங் களில் உள்ள நூலகங்களில் காணலாம்

தொடர் குறிப்புத்தரும் சேவையின் வழிமுறைகள் (Procedures in the Provision of Long-range Reference Service)

தொடர் குறிப்புத்தரும் சேவையை எவ்வாறு அளிக்க வேண்டும்?

டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் இச்சேவையை மூன்று வழிகளில் அளிக்கவேண்டும் என்கிறார். அவைகளாவன:

1. தொடர் குறிப்புத்தரும் சேவைக்காகத் தயாராதல் (Preparation)
2. சேவை செய்தல் (Service)
3. தன் மயமாதல் (Assimilation).

1. தொடர் குறிப்புத்தரும் சேவைக்காகத் தயாராதல் (Preparation)

தயாராதல் என்பதற்கு, குறிப்புத் தரும் நூலகர் சேவைக்கு வேண்டிய ஒவ்வொரு நுணுக்கங்களையும் நன்கு அறிதல் வேண்டும். அதற்காகப் பாடத்திட்டப்படி அமைக்கப் பெற்ற அறிவை நன்கு பெற்றவராக இருத்தல் வேண்டும். மேலும் பருவ இதழ்களாக வெளியிடப்படும் நூற்பட்டிகளைப் பற்றி, அதாவது ஒவ்வொரு குறிப்பும் எவ்வாறு ஒழுங்கு

செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், எந்த அளவுக்குச் செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதையும் அறியவேண்டும். மேலும் அச்சில் வராத செய்திகளையும், செய்தித்தாள் குறிப்புகளையும் மற்றும் ஆய்வுக் கூடங்களிலுள்ள ஆய்வாளர்களுடனும் நிபுணர்களுடனும் தொடர்பு கொண்டு அவர்களுடன் கலந்தாலோசிக்கவேண்டும். சில சமயங்களில் நூலகர் மற்ற செய்தித் தகவல் மையங்களுடன் தொடர்பு, கொண்டு தனக்கு வேண்டிய செய்திகளைத் திரட்ட, அந்த மையங்களைப் பற்றியும் அறிதல் வேண்டும்.

2. சேவை செய்தல் (Service)

சேவை செய்தல் மூன்று செயல்முறைகளை உள்ளடக்கியது. அவைகளாவன:

1. வாசகர்களுக்கு வேண்டிய சரியான செய்திகளை நன்கு அறிந்துகொள்வதற்காக அவர்களிடம் கேள்விகளின் மூலம் கேட்டறிந்து கொள்ளுதல்.
2. பின்பு தேவையான செய்திகள் எந்த நூல்களில் கிடைக்கும் என யோசித்துப் பின் அவைகளைத் தேடுதல்.
3. முடிவில் தேர்ந்தெடுத்து அவைகளை வாசகர்களுக்கு பயனுள்ள வகையில் அளித்தல்.

3. தன்மயமாதல் (Assimilation)

தன்மயமாதல், உடனடிக் குறிப்புத்தரும் சேவையில் விளக்கப்பட்டதைபோல் இச்சேவையிலும் அமைகிறது. தொடர் குறிப்புத்தரும் சேவையில், நூலகர் சேவை செய்து கொண்டே தன் அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும். பல சிக்கலான கேள்விகளுக்கு எவ்வாறு சேவை அளிக்கப்பட்டது என்பதை ஒரு குறிப்புத் தரும் சேவை புத்தகத்தில் எழுதியிருந்தால் அதையே மற்றொரு முறை கேள்வியாகக் கேட்கும்போது உடனடியாகத் தர இயலும். எனவே நூலகர் தன் அறிவாற்றலால் தொடர் குறிப்புத்தரும் சேவையை உடனடிக் குறிப்புத்தரும் சேவையாக மாற்ற முடியுமல்லவா? மேலும் இத்தகைய அறிவுத் திறனைக் குறிப்புத்தரும் நூலகர் மற்ற நூலக அலுவலர்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டும். குறிப்பாக நூல் தேர்ந்தெடுப்புப் பிரிவு, நூல் பகுப்பு மற்றும் நூலகப்பட்டிப் பதிப்பு செய்யும் பிரிவு இவைகளிலுள்ள அலுவலர்களுடன் கலந்தாலோசித்து தன் சேவைக்கு வேண்டிய

நூல்களையும் நூலகக் கூடுதல் பட்டிப் பதிவுகளையும் உண்டாக்கிக் குறிப்புத் தரும் சேவையை எளிதாக்க முடியும்.

முடிவுரை

உடனடிக் குறிப்புத்தரும் சேவை மற்றும் தொடர் குறிப் புத் தரும் சேவை இவைகள் இரண்டும் நூலகச் சேவையின் இரு கண்களாகும். உடனடிக் குறிப்புச் சேவை ஒரு குறிப்புத் தேடும் (Fact Finding) வேலை எனலாம். அதற்காக வேண்டிய குறிப்புத்தரும் நூல்களைப் பெற்று நூலகத்தில் வைத்துக் கொள் வது மிகவும் முக்கியமானது. இவ்வுடனடிக் குறிப்புத்தரும் சேவையை எல்லாவித நூலகங்களிலும் ஏற்படுத்தலாம். ஆனால் தொடர் குறிப்புத் தரும் சேவை நிபுணர்கள், விஞ் ஞானிகள், ஆய்வாளர்கள் போன்றவர்களுக்காகவே உண்டாக் கப்பட்டதாகும். இவ்விதச் சேவையை எல்லா நூலகங்களிலும் அளிப்பதில்லை. பல்கலைக் கழகம், ஆய்வுக் கூடங்கள், செய் தித் தகவல்கள் தரும் மையங்கள் போன்றவைகளிலுள்ள நூலகங்களில் இச்சேவையினை அளிப்பதைக் காணலாம். வருங்காலத்தில் இந்தியாவில் தொடர் குறிப்புத்தரும் சேவை ஒரு முக்கிய இடத்தை விஞ்ஞான உலகில் வகிக்கப் போகிறது.

குறிப்புத் தரும் நூலகரின் பண்பியல்புகள்

நான்முகம்

குறிப்புத் தரும் சேவை மனிதாபிமானமும் தனித்தன்மை யும் உடையதாகும். மனிதாபிமான மக்கள் தொடர்பே குறிப்புத் தரும் சேவைக்கு மிக முக்கியமான காரணமாகும். பயன்படுத்து வோர் மனப்பான்மை மற்றும் அணுகுமுறை ஆகியவற்றைச் செயல்படுத்த உதவுபவை குறிப்புத்தரும் நூலகரின் தகுதி, தன்மை, பயிற்சி ஆகியவைகளேயாகும்.

குறிப்புத்தரும் நூலகரின் பண்பியல்புகள்

குறிப்புத்தரும் நூலகரின் பண்பியல்புகளாகக் கீழே கொடுக்கப்பட்டவையே குறிக்கப் பெறும் :

1. மற்றவர்களின் பார்வையில் குறிப்புத்தரும் நூலகரின் நல்லியல்புகளே தெரியும்படி நடந்து கொள்ளல் வேண்டும்.

2. அறிந்து கொள்ளும் திறம், இரக்கக்குணம் மற்றும் மனிதப் பண்பு உணர்வுகள் உடையவராக இருக்க வேண்டும்.

3. வேலையில் தன்னை முழு மனதாக ஈடுபடுத்திக் கொள் ளல் வேண்டும்.

4. மிக எளிதில் வாசகர்களை அணுகக்கூடியவராகவும், உதவி செய்வதற்கு விருப்பமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

5. குறிப்புச் சேவை செய்பவர், விரிவான அறிவுத் திற னுடையவராகவும், ஆர்வமுடையவராகவும், தகவல் வினவுவோர்க்கு உதவுவதில் உண்மையான விருப்பம் உள்ளவராகவும் உதவும் முறையறிந்தவராகவும் புதிரான செய்திகளை முயன்று ஆராய்ந்து சேவையளிப்பவரா கவும் இருக்க வேண்டும்.

6. அவருக்கு நல்ல நினைவுத்திறன் இருத்தல் அவசியம். அவர் மேலும் நுண்ணுணர்வுடையவராகவும் ஆய்வுப் பொருளை ஆராய்ந்து தீர்மானிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

7. அவர் பணி செய்யுமிடத்திலுள்ள பொருட் தொகுப் பினைப் பற்றி நன்கு தெரிந்தவராகவும் இருக்க வேண் டும்.

8. நிர்வாகத்திறன் உள்ளவராகவும் இருக்கவேண்டும்.

அனுபவத்தால் குறிப்புத்தரும் நூலகர் இயன்றவரை குறிப்புக்களைக் குறிப்புத்தரும் நூல்களிலிருந்து தொகுத்து வைத்திருப்பார். மேலும் அவர் குறிப்புத்தரும் நூல்கள் மற்றும் அதன் சார்புடைய நூல்களைப் பற்றிய ஆழ்ந்த தெளிவான அறிவுடையவராக இருக்க வேண்டும். அவர் நூல் விவரத் தொகுதியினையும், நூற்தொகையினையும், புத்தகப் பட்டியல் களையும், கலைக்களஞ்சியங்களையும் அகராதிகளையும் பயன் படுத்தத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். குறிப்புத்தரும் நூலகர் அயல்மொழிகளையும், அம்மொழி இலக்கியங் களையும், ஆய்வு முறைகளையும், கல்விச் செய்திகளையும் அறிந்தவராக இருக்கவேண்டும்.

அரங்கநாதன் குறிப்புத்தரும் நூலகர் கருத்துப் பொருள் செய்திகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் திறனுடையவராகவும் அவற்றினைப் பயன்படத்தக்க முறையில் விரிவுபடுத்தத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

குறிப்புத்தரும் நூலகர் நூலகத்தின் ஏனைய பிரிவுகளில் பணி செய்வோருடன் தனது அனுபவ அறிவினைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவரே குறிப்புத்தரும் பணியினை விரைவாக மேற் கொள்ளத்தக்க வகையில் நூல் விவரப் பதிவேடுகளையும், தேவைக் கேற்ப நூற் பிரதிகளையும் அதிகமாக வாங்கும்படி செய்ய ஆலோசனை வழங்குவார்.

முடிவுரை

நிறைவாக, குறிப்புத்தரும் நூலகர் ஒரு துறை சிறப்பாய்வாளர் ஆவார். அவர் தன் பணித் துறையில் நன்கு பயிற்சி பெற்றவராவர். மேற்சொன்ன பண்பியல்புகள் அமையப் பெற்ற குறிப்புத்தரும் நூலகர் பின்பற்றத்தக்க சிறந்த குறிக்கோள் உடையவராகத் திகழ வேண்டும்.

பின் குறிப்பு :

15.12.1969 பெங்களூர் மல்லேஸ்வரத்தில் (முன்னர்) முதன்முதலில் இயங்கி வந்த D.R.T.C. கருத்தரங்கில் நூலகத் தந்தை எஸ். ஆர். ரங்கநாதன் துவக்க உரையாற்றினார். அதன் தமிழ் வடிவம். நூலகம் மாத இதழ்கள் மலர் 4, இதழ் 5 ஜனவரி 1970 பக்கங்கள் 5 - 11. மலர் 4 இதழ் 6 பிப்ரவரி 1970 பக்கங்கள் 4 - 8 வெளியிடப்பட்டது. அடுத்த நூலகம் இலக்கியம் மாத இதழில் இக்கட்டுரை வெளியாகும்.

பூங்கா நகரம், கம்ப்யூட்டர் Valley என்று அழைக்கப்படும் பெங்களூரில், தற்போது 30 ஏக்கர் நிலப்பரப்பில் I.S.I. D.R.T.C. மைசூர் ரோடு, 8வது மைலில் அமைந்துள்ளது. ஜெருசலம், மெக்கா, திருப்பதி, திருத்தணி புண்ணிய ஸ்தலங்களை தரிசிப்பது போல், நூலகர்கள் DRTCஐ ஒரு முறையாவது சென்று சேவித்து, தரிசித்து வருவது நமக்கும் பயன்படும். நூலகத் தந்தையும் நம்மை ஆசீர்வதிப்பார்.

டாகுமெண்டேஷன் பற்றிய புதிய கருத்துக்கள் தொடர்ந்து வெளிவரும். இச்சொல்லுக்கு புதிய சொல்லாக்கம் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

- ஆசிரியர்

பழங்கால எழுத்துக்கள்

கிருஸ்துவுக்கு முன் (கி.மு) 4-ம் நூற்றாண்டிலேயே எழுத்துக்கள் உபயோகத்தில் இருந்திருக்கின்றன. எகிப்து எழுத்துக்களில் எழுதிய பேப்பிரஸ் ஏடு ஒன்று, இன்னும் பாரீசில், உள்ள பிப்ளியோதெக் நேஷனல் என்ற தேசிய புத்தக சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் என்னைக் கவர்ந்த புத்தகம்
கவியரசு வைரமுத்து

சமீபத்தில் உங்களைக் கவர்ந்த நூல் எது?
(கமலத்தம்மாள், அரக்கோணம்)

முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய திருக்குறள் உரை நூல். அறிவு தெளிவு அழகு நுட்பம் செப்பம் அனைத்தும் இழைந்த அரிய உரை அது. கலைஞர் (மு. கருணாநிதி) வள்ளுவரின் வரலாற்று வரிசையில் சேர்ந்து விட்டார்.

வாசகர் எண்ணம்

பாடிப் பழகு

பேராசிரியர் தங்க. சிகாமணி
57 சானகிராம் காலனி
அரும்பாக்கம்
சென்னை- 106.

1. கிறுக்கலாம்

இடமிருந்து கிறுக்கலாம்.
இங்கு மங்கும் கிறுக்கலாம்
வரிவரியாய் கிறுக்கலாம்
வலம் வந்து நிறுத்தலாம்!

2. கீரலாம்

மேலிருந்து கீரலாம்.
மென்மையாகக் கீரலாம்.
குனிந்து நிமிர்ந்து கீரலாம்.
கோடு ஒன்று கீரலாம்.

3. வரையலாம்

மேலும் கீழும் வரையலாம்
மேடு பள்ளம் வரையலாம்
மேலும் மேலும் வரையலாம்
மேருமலையைப் பார்க்கலாம்!

4. வளைக்கலாம்

அலையைப் போல, வளைக்கலாம்
அதனைக் கண்டு திளைக்கலாம்
மலையைப் போல வரையலாம்
மரங்கள் நட்டு வளர்க்கலாம்.

கம்ப்யூட்டர் யுகம்

இன்டர்நெட்

கணிப்பொறி உலகில் இன்று பிரபலமாக பேசப்படுவது 'இன்டர் நெட்' (Intermet) International Network என்பதன் சுருக்கமே இன்டர்நெட். பல கணிப்பொறிகளை ஒன்றையொன்று இணைத்து தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் முறையை 'நெட்வொர்க்' என்று அழைக்கின்றனர். ஒரே கட்டடத்தில் உள்ள பல கணிப்பொறிகளை இணைத்தால் Local Area Network (LAN) என்று கூறுகின்றனர். பல நகரங்களிலுள்ள கணிப் பொறிகளை இணைத்துப் பணிபுரிந்தால் Wide Area Network (WAN) என்று அழைக்கின்றனர். ரயில்வே முன்பதிவு இந்த முறை யில்தான் செய்யப்படுகிறது. பல்வேறு நாடுகளிலுள்ள கணிப் பொறிகளை இணைப்பது 'இன்டர்நெட்'

ஒரு கணிப்பொறியைத் தொலைதூரத்திலுள்ள இன் னொரு கணிப்பொறியுடன் எப்படி இணைப்பது? இணைப் பதற்கு வயர், கேபிள் இவைவ வேண்டாமா? இதற்குத்தான் தொலை தொடர்புத் துறை நமக்குக் கைகொடுக்கிறது. தொலை பேசி மூலம் தொலைதூரத்திலுள்ள ஒரு நபரிடம் பேச முடிகிறது அல்லவா? அதே இணைப்பைப் பயன்படுத்திக் கொண்டு கணிப்பொறித் தகவல்களையும் பரிமாறிக் கொள்ள முடியும்.

ஒரு கல்வி நிலையத்தில் பலரும் சென்று படிக்கிறோம். ஒரு சினிமாத் தியேட்டரில் பலரும் சென்று சினிமா பார்க்கிறோம். இப்போது நாம் நேரில் செல்லாமல், வீட்டி லிருந்தபடியே அஞ்சல் மூலமாக பி.ஏ., எம்.ஏ., படிக்கிறோம். இதற்காக பல்கலைக் கழகங்கள் திறந்தவெளி அஞ்சல்வழி கல்வி வகுப்புகளை நடத்துகின்றன. அதே பெரிய கணிப் பொறி நிறுவனங்கள் பிரம்மாண்டமான கணிப்பொறிகளை நிறுவி அவற்றில் பொறியியல், மருத்துவம், சட்டம், உடற்கூறு இயல், சினிமா, இசை, கலைக்களஞ்சியம் போன்ற தகவல் களைப் பதிந்து வைத்திருக்கின்றன. உலகின் எந்த மூலையிலி ருந்தும் அந்தக் கணிப்பொறியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, உங்கள் வீட்டுக் கணிப்பொறித் திரையிலேயே அந்த தகவல்களை எழுத்துகளாக, வரைபடங்களாக, இசையுடன் கூடிய வீடியோ படங்களாக கண்டுகளிக்கலாம். தேவையான

தகவல்களை உங்கள் கணிப்பொறியில் பதிந்து கொள்ளவும் வசதியுண்டு.

ஒரு கணிப்பொறி, ஒரு தொலைபேசி இணைப்பு, ஒரு மோடம், ஒரு சாஃப்ட்வேர் தொகுப்பு இருந்தால் போதும். இந்தியாவில் அரசுத் துறையான விதேஷ் சஞ்சார் நிலையத்தில் வைப்புத் தொகை செலுத்தி உறுப்பினராகிக் கொள்ள வேண்டும். ஒரு குறியீட்டு எண் உங்களுக்குத் தரப்படும். தகவல்களை வழங்கும் கணிப்பொறி ஒவ்வொன்றுக்கும் ஒரு முகவரி இருக்கும். அவற்றை வெப் சைட் (Wap Site) என்கின்றனர். உங்கள் குறீயீட்டு எண்ணை டயல் செய்து, வெப் சைட்டின் முகவரியைத் தெரிவித்தால் போதும். இத்தகைய உலகளாவிய வலைப்பின்னல் கணிப்பொறித் தொடர்புகளை World Wide Web (WWW) என்று அழைக்கின்றனர்.

மகளிர் மலர்

நூலகத் துறையில் முத்திரை பதித்த பெண் மணிகள்.

- *1996 இல் இந்தியா டுடே ஏப்ரலில் ரூ. 25 விலையில் 160 பக்கங்களில் பெண்கள் மலர் வெளியிட்டுள்ளது.*
- *1996இல் தினமணி நாளிதழ் மகளிர் மலர் அண்மையில்_ஜனவரியில் ரூ. 7 விலையில் மகளிர் மலர் வெளியிட்டது.*

நூலகத் துறையில் பல புகழ்பூத்த பெண்மணிகள் உண்டு. அவர்களைப் பற்றிய சிறு குறிப்புகள் கூட இல்லாதது கண்டு நூலகம் இலக்கியம் கவலை கொண்டது.

பொது நூலகத் துறையில் இரு புகழ்பூத்த துணை இயக்குநர்கள் வருகிற நூலக இலக்கியம் இதழ்களில் பேட்டி களாக, கலந்துரையாடல்களாக, பொது நூலகத் துறை இயக்குநர், நூலக இயக்க விடிவெள்ளி இரா. கண்ணன் ஆசியுடன் வெளிவர உள்ளன.

பிரிட்டிஷ் கவுன்ஸில் நூலகராக இருந்த திருமதி டாக்டர். சுசீலா குமார், தற்போது மெட்ராஸ் லைப்ரேரி அசோயேஷனில் தலைவராக பணியாற்றி வருகிறார்.

அமெரிக்க தகவல் நிலைய நூலக இயக்குநர் திருமதி இந்திரா சோமன், குடத்துக்குள்ளிருக்கும் அருணை ஜோதியாவார். சென்னைப் பல்கலைக் கழககத்தில் நூலகக் கல்வி பேராசிரியர்கள் இருவர் மாணவர்களுக்கு போதிப்பவர் களாக உள்ளனர்.

1. திருமதி மனோரமா ஸ்ரீநாத்

3. திருமதி ....

கல்லூரிகளில் ஏராளமானோர் புகழ் பூத்தவர்கள் உண்டு.

டாக்டர் செல்வி வசந்தா நூலக இயக்கத்தில் உரத்த குரல் கொடுத்து வருவர். நூலக நிலவு இவர்.

C.L. R.I திருமதி ....

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

தினமணிக்கும், இந்தியா டுடே திருமதி வசந்திக்கும் தகவல்கள் எட்டவில்லை என வருத்தப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

நாம் விரிவாக தமிழக நூலகப் பணியில் பெண்கள் என்ற தொடரை தொடரலாம்.

தொடரும்...



வசந்தா பதிப்பகத்தின் புதிய வெளியீடு

மனித உயிருக்கு மரியாதை இல்லை!

முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
அவர்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்பு

கலைமாமணி டாக்டர் வாசவன் வழங்கிய அணிந்துரை

இந்த விதைக்குள்தான் எத்தனை பெரிய விருட்சம்?

வியப்பின் விழுதுகள் மண்ணைத் தொடுகின்றன. விரிந்த கிளைகள் விண்ணைத் தொடுகின்றன.

விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்ற முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் ஆலந்தூர் மோகனரங்கன் அவர்களின் பலவிதமான பரிமாணங்கள், எனக்கு முப்பது ஆண்டுக் காலமாக அறிமுகமானவை. என்னிடம் பாசத்தோடும் பணிவோடும் நட்பாடுபவை.

இதையே இன்னொரு கோணத்திலும் சிந்திக்கத் தூண்டுகின்றார் டாக்டர் ஆலந்தூர் மோகனரங்கன் அவர்கள்.

இவருக்குள் எத்தனை மோகனரங்கன்கள்?

தமிழ்க் கடலைக் கடைந்து, அமுதம் புரந்த அருந்திறல் அறிஞர் மோகனரங்கன்;

பாட்டுத் தமிழ் நெய்து, பாட்டுத் திறத்தாலே, இவ்வையத்தைப் பாலித்திடும் பாவலர் மோகனரங்கன்;

வண்டமிழை வனப்புத் தமிழாக்கி, புதுமைகளுக்கு விழி திறக்கும் விடியல் சூரியனாக மோகனரங்கன்;

காலம் உவந்தளித்த கவித்தொகையாக மோகனரங்கன்;

போற்றும் அறங்களுக்கெல்லாம் நற்றிணையாக மோகனரங்கன்;

உம்பர் உவக்கும் தேம்பாவணியாய் மோகனரங்கன்;

பாவேந்தர் வழிவந்த பாண்டியன் பரிசாக மோகனரங்கன்...

ஒரு மோகனரங்கனுக்குள் எத்தனை எத்தனை மோகனரங்கன்கள்?

டாக்டர் மோகனரங்கன் தொன்மைத் தமிழின் தொலைவு கடந்து வந்து, இற்றைத் தமிழில் இறங்கி நின்று புத்திலக்கியத்திற்கு வழங்கிய பங்களிப்புகள் அதிகம். கவிதை,

கவிதை நாடகம், இசைப் பாடல்கள், காப்பியம், வாழ்க்கை வரலாறு, கட்டுரை, சிறுகதை, நவீனம், குழந்தை இலக்கியம், தமிழ்க் கவிதைகளில் சந்த ஆராய்ச்சி போன்ற தொகுதிகளுக்கு இவர் தகுதியாய் தந்த நூல்கள் நூற்றுக்கும் மேலாக வளர்கின்றன.

பொதுவாக இந்தக் காலத்தியச் சிறுகதைகள் சந்தை கூட்டுகின்றன; ஆனால் சிந்தனையைக் கூட்டுவதில்லை. வன் முறைக் கலாசாரங்கள் நாளுக்குநாள் வளர்வதற்கு இவை கொம்பு சீவி விடுகின்றன.

வள்ளுவர் தோற்றும், வன்முறைகள் வென்றும் வரும் இந்நாளில் சமுதாயச் சீர்கேடுகளை வேரோடு வெட்டிச் சாய்ப்பதற்கு, நாணயமான படைப்பாளிகள் படாத பாடு படுகிறார்கள்; பாடுபட்டிருக்கின்றனர்.

இப்பொழுது மோகனரங்கனின் முறை. புற்களைச் சீவ உழவாரப்படை போதும். ஆனால் புன்மைகளைச் சீவ ஒரு போர்ப்படையே தேவைப்படுகிறது. அதனால் '**மனித உயிருக்கு மரியாதை இல்லை**' என்ற ஒரு நூல் படையைத் திரட்டி, பதினாறு கதை வீரர்களுடன் பாசறையை நோக்கிச் சங்கநாதத்துடன் புறப்படுகின்றார் ஆசிரியர்.

இந்தப் போர் அறப்போர். அதனால் பதினாறு கதைகளிலும் கத்தி இல்லை; இரத்தம் இல்லை. கதைகளில் துடிக்கிற மனங்களைக் கொண்டு ஒரு ரெயிலையே ஓட்டலாம். அறிவொளி இயக்கத்தில் அரை குறையாய்க் கற்றவர்கள் கூட இதைப் படித்துப் புரிந்து கொள்ளலாம். திருத்தலாம்; திருந்தலாம்.

இது மனிதர்களைச் செய்கின்ற நூல். காணாமல் போன மனிதர்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கின்ற நூல். செய்ய வல்ல நூலைச் சிறப்பாகப் படைத்திட்ட முத்தமிழ்க் கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. **மோகனரங்கன்** அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

அன்புடன்,

வாசவன்

விலை ரூ. 40.00

வசந்தா பதிப்பகம்
**14, இரண்டாவது குறுக்குத் தெரு, குன்றக்குடி நகர்,
ஆதம்பாக்கம், சென்னை 600 088.**

திருக்குறள் மாதிரி ஒரு புஸ்தகம் உலக்துல கிடையாது. ஆனா ஸ்கூல்லே எத்தனை குறள் கத்துத் தரா?

காஞ்சி இளைய முனிவர் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் "கட்டுகளே சுதந்திரம்" பேட்டிக் கட்டுரையில் கல்கி வார இதழ் 14.4.1996 மலர் 54. இதழ் 37. பக்கம் 2.

பத்தி 2. நன்றி. ஆழ்வார்க்கடியான்.

தமிழகத் தலைநகரில் ஒரு புத்தகப் பூங்கா

தமிழ்ப் புத்தகக் கடல்

செழியன்

கோவை, 22 ராஜவிதியில் தமிழ் புத்தகங்கள் மட்டும் விற்கும் விஜயா பதிப்பகம்

சென்னை அண்ணாசாலையில், தமிழுக்கும் மிகுதியாக இடமளித்துள்ள பெரிய புத்தக விற்பனை நிலையம் ஹிக்கின்பாதம்ஸ், 150 ஆண்டுகள் பழமையான ஸ்தாபனம்.

சென்னையில் தி.நகரில் பாண்டிபஜாரில், தமிழ்ப் பதிப்ப கங்கள் குவிந்துள்ளன. பரபரப்பாக விற்பனையைப் பெருக்கி வருமிடத்தில், வெள்ளமாக வெளிவரும் தமிழ்ப் புத்தகங்களை வாசகர்களுக்கு ஒரே இடத்தில், அலைச்சல் இல்லாமல் வாங்க சிறந்த நிறுவனமே 'புக் லேண்ட்.' நேரில் உடன் சென்று பயன் அடையுங்கள்.

(ஆ – ர்) ஆசிரியர்

தலைநகரில் ஒரு புத்தகப் பூங்கா

ஒலி, ஒளிச் சாதனங்களின் வருகை புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை மக்களிடையே குறைத்துக் கொண்டு வருகிறது. தற்போது செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளின் படையெடுப்பு, செய்தித்தாள்கள் படிக்கும் பழக்கத்தைக் கூட மக்களிடம் குறைத்து வருகிறது. குறிப்பிட்ட வார, மாத இதழ்களில் பிரபல எழுத்தாளர்களின் தொடரை வாரா வாரம் விடாமல் தொடர்ந்து படித்து, அத்தொடர் குறித்து பல்வேறு

விமர்சனங்களையும் நம் வீட்டுப் பெண்கள் எழுப்பி வந்தது ஒரு காலம். அதுபோல, நல்ல புத்தகங்களைப் படிக்கும் பழக்கமும் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரிடமும் இருந்து வந்தது. தற்போது இவையனைத்தும் தலை கீழ் என்றே சொல்லலாம்.

நல்ல கருத்துக்களைப் புத்தகங்களின் வாயிலாகப் படிப்பதும், நல்லவற்றை வருங்காலச் சந்ததியினருக்கு அறிவுறுத்துவதும் குறைந்துவிட்டது. இத்தகைய நிலை ஒருபுறம் நீடித்தாலும், 'இவர் சரியான புத்தகப் புழு' என்று சிலர் தனது நண்பரை அறிமுகப்படுத்துவது இன்னமும் ஒய்ந்துவிடவில்லை. இத்தகை. புத்தகப் புழுக்களும் நல்ல புத்தகங்களைத் தேடி அலைந்து வாங்கிப் படித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பல்வேறு எழுத்துக்கள் குறித்து அவ்வப்போது கூடி விவாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

புத்தகம் படிப்போர் கூறும் பொதுவான குற்றச்சாட்டு. 'தற்கால இலக்கியப் போக்கு' குறித்து ஒரு இலக்கியவாதி புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அந்தப் புத்தகத்தை வாங்க பல இடங்கள்ல ஏறி இறங்கிட்டேன். இன்னும் அந்தப் புத்தகத்தை வாங்க முடியலை. உங்களுக்கு இதைப்பத்தி ஏதாவது தெரியுமா?'

இப்படித் தேடியலைந்தும் புத்தகம் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அனைத்து தரப்பிலும் எழுகின்ற பொதுவான குற்றச்சாட்டு. இலக்கிய ஆர்வலர்கள் ஒன்றாகச் சந்திக்கும்போதும் இது பற்றிதான் பேச்சு. புத்தகப் புழுக்கள் சந்திக்கும்போதும் இதுகுறித்த விவாதம்தான் அதிகமிருக்கும்.

நாம் வாங்க நினைக்கும் புத்தகம் ஒரிடத்திலும் கிடைக்கவில்லையே அல்லது ஒவ்வொரு புத்தகத்தை வாங்கவும் வெவ்வேறு இடங்களில் உள்ள புத்தக் கடைகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறதே என்பதுதான் பலரின் ஆதங்கமும். புத்தகப் பதிப்பாளர்கள் அனைத்து பதிப்பகங்களின் விற்பனைக் கூடங்களை ஒரே வளாகத்தில் அமைக்க உதவும்படி அரசைக் கோரி வருகின்றனர். ஆனால் அது விழலுக்கு இறைத்த நீர்தான்....

இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் புத்தகப் புழுக்களின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ் புத்தகப் பதிப்பாளர்கள், தனியாக புத்தகம் வெளியிட்டோர் ஆகியோரின் நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில், 'புக் லேண்ட்ஸ்' என்ற பெயரில் புதிய புத்தக விற்பனை நிலையத்தைத் தொடங்கியிருக்கிறது சென்னையில் உள்ள நர்மதா பதிப்பகம்.

தமிழ் நூல்கள் மட்டுமல்ல, ஆங்கில இலக்கியம், ஹிந்தி அரிச்சுவடி, மாணவர்களுக்கான கம்ப்யூட்டர் புத்தகங்கள், குழந்தைகளுக்கான பொது அறிவுப் புத்தகங்கள். பக்தி இலக்கிய நூல்கள், பல்வேறு நிறுவனங்கள் வெளியிட்டுள்ள நூல்கள், மத நூல்கள்.... இப்படி 5000 த்துக்கும் மேற்பட்ட தலைப்புகள் கொண்ட புத்தகங்களை 'புக் லேண்ட்ஸி'ஸ் விற்பனைக்கு வைத்துள்ளனர்.

அனைத்து எழுத்தாளர்களின் வாசகர்களுக்கு ஒர் அரிய சேவையைச் செய்துவரும் நர்மதா பதிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் டி.எஸ். ராமலிங்கத்தைச் சந்தித்து, இப்புதிய புத்தக நிலையம் குறித்துக் கேட்டோம்.

"புக் லேண்ட்ஸ்'' என்ற இப் புத்தக நிலையத்தை ஆரம்பித்து இரண்டு மாதங்களாகின்றன. இதை ஆரம்பித்த நோக்கம், அனைத்துப் பதிப்பாளர்களின் புத்தகங்களும் ஒரே இடத்தில் (ஒரே கூரையின் கீழ்) வாசகர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதுதான். இதற்காக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பதிப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டோம். இதை ஆரம்பிப்பதற்கு முன் எட்டு மாதங்களாக பல பதிப்பக உரிமையாளர்களை நேரிலும், தபால் மூலமும் தொடர்பு கொண்டோம். தற்போது 100 க்கும் மேற்பட்ட தமி1ழ் பதிப்பாளர்களின் வெளியீடுகளை வாங்கி, இங்கு விற்பனைக்கு வைத்துள்ளோம். விரைவில் தமி2ழ்நாட்டில் உள்ள அனைத்துப் பதிப்பாளர்களின் வெளியீடுகளையும் வாங்கி விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

"தமிழ் நூல் பதிப்பாளர்கள் தவிர, சென்னையில் உள்ள ராமகிருஷ்ண மட நூல்கள், பாண்டிச்சேரியில் உள்ள அரவிந்தர் ஆசிரம நூல்கள், திருச்சி தபோவன நூல்கள் என்று பல்வேறு சமய வெளியீடுகளையும் வாங்கி வைத்துள்ளோம். இவை தவிர, ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஓசோ ஆகியோரின் தொகுப்புகளும் எங்களிடம் உள்ளன. ஆங்கில நாவலாசிரியர்கள், இலக்கியவாதிகளான வேர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, ஆஸ்கர் ஒயில்ட் ஆகியோரின் நூல்களையும் தில்லி மற்றும் சென்னையில் உள்ள பிரபல ஆங்கில நூல்களைப் பதிப்பிக்கும் நிறுவனங்களிடமிருந்து வாங்கி, விற்பனைக்கு வைத்துள்ளோம்'' என்று தெரிவிக்கிறார் ராமலிங்கம்.

பதிப்பக நூல்கள் தவிர, பல நூலாசிரியர்களின் புத்தகங்களையும் இவர்கள் வெளியிடுகிறார்கள். அவர்களது புத்தகங்களையும் இப்புத்தக நிலையத்தில் காண முடிந்தது. இது குறித்து, "பல நூலாசிரியர்கள் நல்ல தலைப்புகளில் நல்ல கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களை வெளியிடுகிறார்கள். ஆனால் அவற்றை விற்பதில் பல்வேறு சிரமங்களை அவர்கள் சந்திக்க நேரிடுகிறது. அதனால் தனியாக புத்தகம்

வெளியிட்டுள்ள புத்தக நூலாசிரியர்களின் புத்தகங்களையும் விலைக்கு வாங்கி, விற்பனை செய்கிறோம்'' என்றார் ராமலிங்கம்.

''பதிப்பகத்தாரிடமிருந்து புத்தகங்களுக்கு உரிய விலையை முன்னரே கொடுத்துத்தான் வாங்குகிறோம். மக்களுக்கு உதவும் வகையில் பிரபல எழுத்தாளரின் நூல்களிலிருந்து தற்போதுள்ள அறிமுக எழுத்தாளரின் படைப்பு வரை அனைத்தும் எங்களிடம் உள்ளன. எங்களிடம் இல்லாத புத்தகம் ஒரு வாசகருக்குத் தேவையென்றால் அதையும் உரிய பதிப்பகத்தாருடன் தொடர்பு கொண்டு வாங்கித் தருகிறோம். சில புத்தகங்களைத் தள்ளுபடி விலையிலும், அதிகளவு புத்தகங்களை வாங்குவோருக்கு சலுகை விலையிலும் விற்பனை செய்கிறோம்.''

தமிழ் நூல்களை வாசிப்பது குறைந்து வருகிறது. தமிழ் நூல்களைப் படிக்கும் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் சில திட்டங்களையும் இந் நிறுவனம் வகுத்துள்ளது. அதாவது, ஒரு வருட காலத்தில் ரூ. 1,000 மதிப்புள்ள தமிழ் நூல்களை வாங்குவோருக்குப் பரிசு கூப்பன் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்பட்ட பரிசு கூப்பன்களைக் குலுக்கி, சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ரூ. 2,000 மதிப்புள்ள புத்தகங்களை பரிசாக வழங்க இந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மேலும், இப்புத்தக நிலையத்தில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழி எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் பிற நூல்களை விற்பனை செய்யவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

''சென்னை, வடக்கு உஸ்மான் சாலையில் இப்புத்தக நிலையகம் உள்ளதால், அனைத்துப் பகுதிகளில் உள்ள மக்களும் இங்கு வருகின்றனர். பெரும்பாலோர் ஆங்கில நூல்களை அதிகம் வாங்குகின்றனர். அவை தவிர, மருத்துவம், முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் நூல்கள் ஆகியவை அதிகம் விற்பனையாகின்றன. அனைத்து எழுத்தாளர்களின் நூல்களும் இங்கு கிடைப்பதால், பொது மக்களின் வருகையும் அதிகம் உள்ளது'' என்கிறார் இப்புத்தக நிலையத்தின் மேலாளர் என்.கே. கிருஷ்ணமூர்த்தி.

நர்மதா பதிப்பகம் கடந்த 18 ஆண்டுகளாக பதிப்பகத் தொழிலில் ஈடுபட்டு வருகிறது. நாவல், சிறுகதை, இலக்கியம், மருத்துவம், ஜோதிடம் என்று பல பிரிவுகளில் 1000 க்கும் மேற்பட்ட தலைப்புகளில் நூல்களை வெளியிட்டுள்ளது. இத்துறையில் அனுபவம் மிக்க இந் நிறுவனத்தின் இப்புதிய முயற்சி வாசகர்களுக்கு, குறிப்பாக தமிழ் வாசகர்களுக்குச் செய்யும் பெரிய சேவை.

திருக்குறள் மனிதநேய உரை

அரிமதி தென்னகன்.1995. ப. 16 272 ரூ. 25
முத்து பதிப்பகம்,
7, வில்லியம் வளாகம், இரண்டாம் வீதி,
கன்னியாகுளம் சாலை, விழுப்புரம் 605 602
தொலைபேசி: 23375



"வள்ளுவம் நெறியில்
"மனிதம்" வளர்ப்போம்!

"காலம் கடந்த நூல் திருக்குறள்" என்னும்
கருத்திற்குச் சான்றாய் அமைவதே
மனிதநேய உரை.

மனித நேயச் சிந்தைக்கு, வள்ளுவம் வழி
மேலும் வலிமை சேர்ப்பதே
உரைபெறு நோக்கம்.

அதன் வெற்றியே உரையின்...
என் உழைப்பின் பயன்!

ஆயிரத்தோடு இதுவும் ஒன்றாக
அமையட்டுமே என எழுதப்பட்டதன்று
மனிதநேய உரை.

ஆயிரத்துள் ஒன்றாகச் சிறக்கட்டுமே
என் இவ்வுரையைக் காலம் கணிக்கும்
என்பது என் எதிர்பார்ப்பு!

"உரை உலகம்" காணாப் புதிய உரை,
எங்கும் இவ்வுரையில் உண்டு.

உவை செய்வார்க்கு, இலக்கிய மரபு
தந்த உரிமை, எனக்கு மட்டும்
இல்லாமற் போகுமா!
முத்துப் பதிப்பக மு. லெட்சுமணர்க்கும்,
இளவல் லெ. விசுவநாதர்க்கும்
என் மரபும் நன்று கூறுமாக.

"மானுடம்"
ஆனந்தரங்கர் நகர்
புதுச்சேரி 605 008.

மனிதன்
அரிமதி தென்னகன்
28.9.95

பரிசு மழை, ராசீ.

(டாக்டர் ரா. சீனிவாசன்)

1995. ப. 136. ரூ. 25. அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
ஷெனாய் நகர், சென்னை 600 030.
தொலைபேசி 61 12 30.

முன்னுரை

காவியங்களைப் பழைய காலத்தில் எழுதினர்; ஒரு தலைவனை வைத்துப் பல கிளைக் கதைகளை உடன் சேர்த்தனர்; அதையும் சிறுகதைத் தொகுப்பு என்று கூறலாம்.

இன்று காவியங்களை எழுத முடியவில்லையே என்று பலர் சுட்டிக் காட்டி உள்ளனர். அவற்றின் இடத்தைச் சிறுகதைத் தொகுப்புகள் பெற்றுள்ளன. அவை இன்று வாசகர்களை ஈர்க்கின்றன.

வாசகர்கள் தம் சுவைக்கு ஏற்ப ஆசிரியர்களைத் தேடுகின்றனர். வாசிக்கும் ஆர்வம் மிக்கு உள்ளது.

என்னால் சிறுகதைகளை எழுத முடிந்தது; எழுதினேன்; 'பரிசு மழை' என்ற தலைப்பில் வெளியிடுகிறேன்.

இன்று சமுதாயம் பல மாற்றங்களைப் பெற்று வருகிறது; பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றது. கருத்தோட்டம் மாறி வருகிறது. அவற்றைச் சுட்டிக் காட்டினால்தான் இலக்கியம்

உயிர்த்துடிப்போடு இயங்கும். மற்றவர்கள் காண்பதுதான் இது. அவர்கள் பேசிக் கொள்பவை இவை.

ஒரு பத்திரிகை நிருபர் செய்யும் வேலையை என் எழுத்துச் செய்து இருக்கிறது. அவர்கள் பேசும் உரையாடல்களை இங்குப் பதித்து உள்ளேன். பத்திரிகை நிருபர்கள் நேரில் சென்று சந்தித்து எழுதுகிறார்கள். இவை சந்திக்காமலேயே எழுதியவை.

எதுவும் கற்பனையில் இருந்து எழுதப்பட்டது அன்று. கற்பனை துணை செய்து இருக்கிறது. இவை அன்றாட நிகழ்ச்சிகள். நாம் சந்திக்கும் மாந்தர்கள்.

இன்று மாந்தர்களின் எண்ணப் போக்குகளில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அவை புதுமை என்று குறிப்பிடப்படுகின்றன. அதனால் என் எழுத்துப் புதுமை பெறுகிறது.

பாரதி எதிலும் புதுமை காண வேண்டும் என்பார். சொற்புதிது, சுவை புதிது வேண்டும் என்பார். செய்திகளும் புதுமை உடையன.

எழுதுவதில் ஒரு தனித்துவம் உள்ளது. அது ஆசிரியனின் தனி முத்திரை. அது அஎழுத்தின் இயக்கத்திற்குத் துணை நிற்கின்றது. ஏன்? அதுதான் எழுத்தே என்றும் கூறலாம். எதை எழுதுகிறான் என்பதோடு எப்படி எழுதுகிறான் என்பதும் எதிர்பார்க்கப்படுவது.

'பரிசு மழை' என்ற தலைப்பு அறிமுகம் ஆகிய தலைப்பு. இன்று எதற்கு எடுத்தாலும் பரிசு என்று கூறி விளம்பர உச்சரிப்போடு இந்த நச்சரிப்பும் சேர்ந்து இருக்கிறது.

அந்த அலை வீச்சு எவ்வளவு தரக்குறைவு என்பதைச் சுட்டிக்காட்டக் கதைகள் சிலவற்றில் இந்த உத்தி பயன்படுத்தப்பட்டு உள்ளது. அதுவே முதல் கதையின் தலைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இத்தொகுப்புக்கு வாசகர்களின் வரவேற்பு இதற்குத் தரும் பரிசு மழையாகும்.

ரா. சீனிவாசன்

திருக்குறள்.

எளிய தெளிவுரையுடன்.
பூவை அமுதன்.
1995. ப. 288. ரூ. 20.

கவிதா பப்ளிகேஷன்ஸ்

8, முத்து கிருஷ்ணன் தெரு, பாண்டி பஜார்,
சென்னை 600 017. தொலைபேசி : 82 70 980

என் உரை

வான்புகழ் வள்ளுவனாரின் திருக்குறளுக்கு மிகச் சிறந்த முறையில் பொருள் உரை, கருத்துரை, தெளிவுரை, விளக்கவுரை, எளிய உரை முதலியன எழுதப் பெற்று உள்ளன.

அதிகம் கற்றவர் முதல், ஓரளவே கற்றவர் வரை, யாவரும் அறிந்து கொள்ளும் வகையில் மிகவும் எளிய உரையாக இனிய தமிழில் எழுதவேண்டும் என்னும் என் நீண்ட நாள் வேட்கை, நிறைவேறும் வாய்ப்பினை எண்ணிப் பெரிதும் மகிழ்கிறேன்.

திருவள்ளுவரின் அரும்பெரும் கருத்துக்களை என் மொழியில் எடுத்துக் கூறும் பெருமையை ஏற்ற இப்பணி, எழிலோடும் எளிய தெளிவுரையோடும் விளங்கும் சிறந்ததொரு பதிப்பாக உங்களுக்குக் காட்சியளிக்கிறது. இதனை நன்முறையில் உருவாக்கிய பதிப்பகத்தார்க்கு என்றும் நன்றியுடையேன் ஆவேன்.

என்றும் உங்கள்,
பூவை அமுதன்
(எஸ். ஆர். கோவிந்தராசன், எம்.ஏ., பி.டி.)

வாசகர் கடிதம்

எஸ். மகேஷ் பாபு

திரு நூலக ஞானி டாக்டர் பா. பெருமாள் அவர்கள் நடத்தும் நூலகம் இலக்கியம் கண்டேன். அருமை. நான் சீர்காழியில் பிறந்தவன். நூலகத் தந்தை அரங்கநாதன் அவர்களைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் சீர்காழியில் பிறந்தவர். ஆனால் அந்த சீர்காழிக்கு வந்தால் அங்கு இருக்கும் நிலைமையே வேறு. பல அரசியல் வாதிகளுக்குசிலை எடுக்கிறார்கள், வைக்கிறார்கள். அவருக்கு ஒரு நினைவாலயம் கூட அங்கு இல்லை. சொல்லப் போனால் சீர்காழியில் உள்ளவர்களிடம் இப்படிப்பட்டவர் இருந்தார் என்றால் எவருக்குமே தெரியாது. திரு நூலக ஞானி எங்களிடம் கூறும் போது அவரை நெய்வமாகவே கருதுகிறேன் என்று கூறிய போது எனக்கு பெருமையாக இருந்தது. சீர்காழியில் நூலகம் ஒன்று உள்ளது. அதைப் பார்த்தால் பாழடைந்த மண்டபத்தில் அந்த நூலகத்தை காணலாம். அங்கு ஒரு லைப்ரேரியன் இருக்கிறார். அவரை கண்டால் எல்லோரும் ஓடிவிடுவார்கள். சிடுமூஞ்சி, கோபம் இதனால் அங்கு செல்வதே கிடையாது. புத்தகங்களும் குறைவு. யாராவது புத்தகம் நன்கொடை தந்தால் அதை கடையில் போடய்யா என்று கூறுகிறார் அந்த நூலகர். அதுவும் அரங்கநாதன் பிறந்த ஊரில். அவருக்காக நினைவாலயம், நல்ல நூலகம் முதலியவை அரசாங்கத்தினரால் அமைத்தால் அது அரங்கநாதன் அவர்களுக்கு நினைவாகவும் அவருக்கு அஞ்சலி செலுத்துமளவுக்கு அவ்வூருக்கே பெருமையாகவும் அமையும். நான் இன்று C.L.I.S. படிக்கிறேன் என்றால் அது யாருக்காக? அரங்கநாதன் பற்றி தெரிந்து கொள்ளத்தான். அந்த ஊரில் நான் பிறந்தேன் என்பது எனக்கு பெருமையாக உள்ளது. அரசியல் வாதிகளின் மனம் மாறி இப்படிப்பட்ட மாபெரும் நூலகத் தந்தைக்கு நினைவாலயம், சிலை அமைத்தால் இவரைப் பற்றிய பெருமை எல்லோருக்கும் தெரியவரும். அங்கு அவரது பெயரால் ஒரு பெரிய நூலகம் தேவை.

எஸ். மகேஷ் பாபு D.T.E. C.L.I.S
115, பிடாரி தெற்கு வீதி
சீர்காழி - 609 110,
நாகை காயிதே மில்லத் மாவட்டம்.

கன்னிமாரா நூல் நிலையம்!

கோ. கிரிஜா

"அப்பாடா, ஒரு வழியாக பாதி பிறந்தநாள் வாழ்த்து மடல்களை படித்துவிட்டேன். என் அன்பர்கள் அனுப்பிய வாழ்த்துக்கள் அவை யாவுமே. "பேசுவது யாரோ இந்தப் பெண்ணவள் யாரோ?" என்று யோசிக்கிறீர்கள் அல்லவா?

நான்தான் கன்னிமாரா பொது நூலகம். இவ்வருடம் எனக்கு 100 வயதாகிறது. நன்றி மறப்பது நன்றன்று அல்லவா, அதனால்தான் நான் உருவாக காரணமாக இருந்த கவர்னர் லார்டு கன்னிமாரா என்பவரின் பெயரையே சூடிக் கொண்டேன். இவர் 1886 1890 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கவர்னராகப் பணிபுரிந்தவர்.

என்னை முறைப்படி 1896 டிசம்பர் 5 ம் தேதி கவர்னர் சர் ஆர்தர் இல்பாங் ஹாவ்லோக் என்பவர் பொது சேவைக்கு வழியனுப்பி வைத்தார்.

என் வாழ்க்கை பயணத்தில் முதலில் நான் எனக்கு அருகாமையில் உள்ள சென்னை அருங்காட்சியகத்திற்கு குறிப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தேன். பின்னர் 1930 ஆம் ஆண்டு முதல் நான் தனியாக இயங்க ஆரம்பித்தேன்.

1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நான் மாநில மத்திய பொது நூலகமாக இயங்கி வருகிறேன். என்னுடைய முழு செலவுகளை தமிழக அரசும், மத்திய அரசும் ஏற்று வருகிறது. என்னுடைய செலவுகளில் பெரும் பகுதியினை தமிழக அரசு ஏற்றுள்ளது.

எனது பொது நலத் தொண்டின் ஆரம்ப கட்டத்தில் என் சேவைகளுக்கு நான் கூலி வசூலிக்கவில்லை. பொது மக்கள் என்னிடம் உள்ள புத்தகங்களை முறையாகப் பயன்படுத்த தவறுகிறார்கள் என்பதை அறிந்த நான் சில சட்ட திட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் கொண்டு வந்தேன்.

இன்று என் சேவையினை பெறவிழையும் அன்பர்களுக்கு நான் இரண்டு வழிகளில் உதவுகிறேன். ஆம் ஒன்று, 15 வயது நிரம்பி, சென்னையில் வசித்து வரும் எவருமே என்னிடம் உறுப்பினராக சேரலாம். இதற்காக ரூ. 50/100/150 செலுத்தி மூன்று டிக்கெட்டுகளுக்கு மூன்று புத்தகங்களை, 45 நாட்களுக்கு வைத்துக் கொள்ளலாம். இந்த கார்டுகளை என்னிடம் ஒப்படைக்கும்போது கட்டணத்தை திருப்பித் தருவேன். மற்றொன்று என்னவென்றால், என்னிடம் வந்து

இலவசமாக என் புத்தகங்களை அங்கேயே படித்து பின் வைத்துவிட்டு செல்ல வேண்டும். மேலும் சில பிஸியான என் உறுப்பினர்களுக்கு நான் 'Homd delivery' சேவையினையும் செய்கிறேன். இதற்காக டிக்கட் கட்டணத்துடன் ரூ.1 மட்டும் மாதம் தோறும் கட்டினால் போதுமானது.

என்னிடம் மொத்தம் 5 லட்சம் புத்தகங்களும், 3,800 மாத, வார இதழ்களும் மற்றும் 250 பத்திரிகைகளும் உண்டு. எல்லா புத்தகம், இதழ்கள் மற்றும் தினப் பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்களும் எனக்கு அவர்களது வெளியீடுகளின் ஓர் பிரதியை அன்பளிப்பாகத் தரவேண்டும் என்று அரசாங்கம் ஆணை இட்டுள்ளது.

எனக்கு ஒரு புதிய மாளிகையினை என் பழைய மாளிகைக்கு முன் எழுப்பியுள்ளார்கள். எல்லாம் உங்கள் நன்மைக்குத்தான். இங்கு என்னிடம் பல லேட்டஸ்ட் எடீஷன் என்சைக்ளோபேடியாஸ், டிக்ஷினரீஸ், இயர்புக்ஸ் மேலும் குறிப்பு ஆதாரங்களும் உண்டு.

சுருக்கமாக சொல்லப் போனால் நான் பல பிரிவுகளாக இயங்குகிறேன். ஸ்டாக் ஸெக்ஷன், புத்தகப் பிரிவு, குறிப்பு ஏடுப் பிரிவு, இந்திய மொழிகளின் பிரிவு, க்ஸெரோக்ஸ் பிரிவு, வீடியோ பிரிவு மற்றும் ஒ.அ.ரு. போன்ற தேர்வுகளை எழுத ஆயத்தமாகும் மாணவர்களுக்காக ஒரு தனிப் பிரிவு என நான் இயங்கி வருகிறேன்.

தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை இயங்குகிறேன். ஒரு வருடத்தில் எனக்கு ஒன்பது நாட்கள் மட்டுமே ஓய்வு. ஆம். மூன்று மத்திய அரசு விடுமுறைகளாகிய சுதந்திர தின விழா, குடியரசு தின விழா, காந்தி ஜெயந்தி ஆகிய நாட்களும், ஆறு மாநில அரசு விடுமுறைகளாகிய பொங்கல், தீபாவளி, சரஸ்வதி பூஜை, கிறிஸ்துமஸ், ஆயுத பூஜை, தமிழ் வருடப் பிறப்பு.

நான் பல எதிர்கால திட்டங்களை உங்களின் நன்மைக்காக வகுத்துள்ளேன். மைக்ரோ பிலிம் மூலம் என்னிடமுள்ள விலை மதிப்பற்ற சில ஏடுகளை மைக்ரோ பிலிம் செய்யவும், என் அன்பர்களாகிய உங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருவதினால், புதிய கட்டிடத்தை எழுப்ப எண்ணியுள்ளேன். கணிப்பொறி களை நிறுவவும் நான் திட்டமிட்டுள்ளேன்.

என் அன்பர்களே வாருங்கள் என்னிடம், வந்து என்னிடம் உள்ள அறிவினை பெற்றுச் சென்று பயனடையுங்கள். நீங்கள் என்னிடம் காணும் குறைகளை,

நான் வைத்துள்ள 'enquiry box' ல் போடுங்கள். நிச்சயமாக உங்கள் குறைகளை ஏற்று, உதவி புரிவேன். நான் வாழ்வது உங்களுக்காக, என்னை வாழ வைப்பது நீங்கள் தானே. என்னிடம் வந்து அளவிலா அறிவுச் செல்வத்தை பெற்றுச் சென்று பிறருக்கும் உதவி புரியுங்கள். உங்கள் வரவினை என்றும் எதிர்நோக்கி, உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறேன்.

'பெண்மணி' விளம்பர வாசகங்களில்

ஒரு நல்ல தாய்

ஒரு நல்ல தோழி

ஒரு நல்ல நூலகம் மட்டுமே தரும் அனுபவ அறிவைத் தருகிறது 'பெண்மணி' மாதர் இதழ் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்த நல்ல நூலகம் நான்தானே?"

அன்புடன்

கன்னிமாரா லைப்ரரி.

மணி 1 நாதம் 4 ஏப்ரல் 1996. பெண்மணி மாதர் இதழ்

செய்தி விமரிசனம்

பெண்மணி மணி 1 நாதம் 4 ஏப்ரல் 1996 மாதர் மாத இதழ் பக்கம் 15 ல் "கன்னிமாறா நூல் நிலையம்" கோ. கிரிஜா என்பவரால் எழுதப்பட்ட சிறப்பான கட்டுரை ஒன்று வெளியாகி உள்ளது.

பாராட்டுக்கள். அவர் முகவரியை தெரிந்து கொள்ள ஆவல். மேலும் பல நூலகங்களை புதிய சிந்தனையில் அறிமுகப்படுத்தலாம்.

கோ. கிரிஜா பெண் என்றே கொள்வோம். கன்னிமாரா என்ற சொல் படிப்பதற்கு உற்சாகமாக இருக்கும்.

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் படிப்பதற்கே புத்தகங்கள் என்றார். கன்னிமாறா என்றால் வேறு பொருள் தொனிக்கிறதே.

படிக்காத புத்தகங்கள் தொடாத நூல்கள் என்றும் பொருள்படுமே!

அன்புடன் கன்னிமாறா லைப்ரரி என்று முடித்திருப்பதே சரியான பதப் பிரயோகமாகும்.

ஆமாம்! கோ. கிரிஜாவின் விளக்கம் என்னவாக இருக்கும்! அறிவோமா?

- அமாவாசை.

இராஜா ராம்மோகன்ராய் நூலகக் கொடை நிறுவனம்

ஆர் ராமசாமி M.A., M.L.I.S. B.Ed.,

தெற்கு மண்டல அலுவலர்

'சதி' எனப்படும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிக்கவும், இந்திய மக்களுக்கு சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாடுபட்ட பெருமகனார் இராஜா ராம்மோகன் ராய். 1772_ல் பிறந்த அவருடைய 200_வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களின்போது அவருடைய பெயரை நாடெங்கும் நிலைநிறுத்தும் உயரிய நோக்கத்துடன் இந்திய அரசின் பண்பாட்டுத் துறை இராஜா ராம்மோகன்ராய் நூலகக் கொடை நிறுவனம் (Raja Rammohan Ray Library foundation) என்னும் சுயாட்சி அமைப்பு ஒன்றினை உருவாக்கிட முடிவு செய்தது.

1972_மே மாதம் முதல் ஆர். ஆர். ஆர். எல். எஃப் (RRRLF) என்று சுருக்கப் பெயரால் பரவலாக அழைக்கப்படும் இந்நிறுவனம் இயங்கத் தொடங்கியது. இந்திய நாட்டின் பொது நூலக இயக்கத்தினை ஊக்குவிக்க வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும். சுயாட்சி அமைப்பாக இருந்த போதிலும் இதன் நிதி ஆதாரங்கள் முழுவதும் மத்திய அரசினால் வழங்கப்படுகிறது. கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கு 'பல்கலைக் கழக மானியக் குழு' (UGC) எவ்வாறு நாடெங்கும் நிதி உதவி அளித்தும், வழிகாட்டுதல்களைச் செய்தும் செயல் பட்டு வருகிறதோ அதே போன்று பொது நூலகங்களுக்கு உதவிட இந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புதான் இந்த கொடை நிறுவனம்.

ஒரு சிலர் நினைப்பது போல், இராஜா ராம்மோகன் ராய் அவர்களின் தனிப்பட்ட சொத்திலிருந்து இது நடைபெறுவதல்ல. இந்திரா காந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக் கழகத்திற்கு முன்னாள் இந்தியப் பிரதமர் காந்தியின் பெயர் எவ்வாறு வைக்கப்பட்டதோ அதே போலத்தான் இந்த நிறுவனத்துக்கும் இராஜா ராம்மோகன் ராய் என்னும் தலைசிறந்த சமூக சேவகரின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் உள்ள மாவட்ட மைய நூலகங்களுக்கும், மாநில தலைமை நூலகங்களுக்கும், அகில இந்திய அளவில் வெளியிடப்படும் சிறந்த ஆங்கில, இந்தி நூல்களை வாங்கி இலவசமாக இந்த கொடை நிறுவனம் விநியோகிக்கிறது. அத்துடன் ஒவ்வொரு மாநில அரசுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிதி அளித்து அந்தந்தமாநில மொழிகளில்

நூல்கள் வாங்கி பட்டி, தொட்டியெல்லாம் உள்ள பொது நூலகங்களுக்கு மாநில அரசின் பொது நூலகத்துறையின் மூலம் விநியோகிக்கச் செய்கிறது. நூல்கள் வழங்குவது மட்டுமல்லாது புத்தக அலமாரிகள் வழங்குதல், நூலகர்களுக்கு பயிற்சி அளித்தல், நூலகக் கருத்தரங்குகள் நடத்துதல், சிறுவர் நூல்கள் வாங்குதல், மாவட்ட மைய நூலகங்களுக்கு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி, ஒளிப்பதிவுப் பேழை பதிவான் (Colour Television and video cassette Recorder) ஆகியவைகளையும் பொது நூலகங்களுக்கு இராஜா ராம்மோகன் ராய் நூலகக் கொடை நிறுவனம் வழங்கி வருகிறது. நூலகக் கட்டிடங்கள் கட்டுவதற்குக் கிராமப்புற நூலகங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டினைப் பொறுத்தவரையில் பொது நூலகத் துறையின் (Public library Department) கீழ் இயங்கிவரும் அனைத்து நூலகங்களுக்கும் இராஜா ராம்மோகன் ராய் நூலகக் கொடை நிறுவனத்தின் மூலம் 1972 முதல் நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கணிசமான நூலகங்களுக்கு புத்தக அலமாரிகளும், 20 நூலகங்களுக்குக் கட்டிட நிதி உதவியும், தமிழகத்திலுள்ள மாவட்ட மைய நூலகங்கள் அனைத்துக்கும். டி.வி, வி.சி.ஆர் கருவிகளும் ஆர்.ஆர்.ஆர்.எல்.எஃப் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இராஜா ராம்மோகன் ராய் நூலகக் கொடை நிறுவனம் வழங்கும் நிதி உதவிகளில் அகில இந்திய அளவில் புகழ் பெற்றதாக விளங்குவது அரசு சாராத சேவை நிறுவனங்கள் நடத்திவரும் பொது நூலகங்களுக்கு கணிசமான நிதி உதவி அளிக்கும் திட்டமாகும். சேவை நிறுவனங்கள் (Volumtary organisation) என்ற தகுதியுடைய அமைப்புக்கள் நடத்தி வரும் நூலகங்களுக்கு பின்வரும் அளவில் நிதி உதவிமானியமாக (Grant) வழங்கப்படுகிறது

1. நூல்கள் வாங்க. ரூ. 15,000.00

2. நாற்காலிகள், மேசைகள், புத்தக அலமாரிகள் போன்ற பொருள்கள் (Furniture) வாங்குவதற்கு ரூ. 30,000.00

நிதி உதவி பெறுவதற்கு விண்ணப்பிக்க விரும்பும் நூலகங்கள் சங்கங்களின் பதிவுச் சட்டப்படி (Societies Registration Act) பதிவு பெற்ற அமைப்பினால் நடத்தப்பட்டிருக்க வேண்டும். மூன்று ஆண்டுகளாவது செயல்பட்டதற்கு ஆதாரமாகக் கடந்த 3 ஆண்டுகளுக்கான தணிக்கைக் கணக்குகள் (Audited Accounts) வைத்திருக்கவேண்டும். அந்த நூலகம் பொதுமக்கள் அனைவருக்கும் தடையின்றிப் பயன்படுத்த அனுமதி அளிப்பதாக இருக்கவேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி பொது நூலகங் கள் மாநில அரசின் பட்டியலில் இடம்பெறுவதால் நிதி உதவி பெற விரும்பும் அரசு சாறாத நூலகங்களின் விண்ணப் பிங்களை மாநில அரசு பரிந்துரைக்க வேண்டும்.

கல்கத்தாவைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கிவரும் இராஜா ராம் மோகன் ராய் நூலகக்கொடை நிறுவனத்திற்கு டெல்லி, பம்பாய், சென்னை ஆகிய பெரு நகரங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய 4 மாநிலங்கள், பாண்டிச்சேரி, இலட்சத் தீவுகள் ஆகிய 2 மத்திய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நூலகங் களுக்கான தெற்கு மண்டல அலுவலகம் சென்னையில் உள்ளது.

மேலும் விவரங்கள் தெரிய அணுக வேண்டிய முகவரி :

R. Ramasamy,
Assistant field officer (south zone)
Raja Rammohan Roy Library Foundation,
Devenya pavanar District
Central library (Ground floor)
735, Anna salai,
Madras - 600 002.



நூலகத் தந்தை அரங்கநாதன் வாழ்க்கைக் காவியம்

முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

கணவரை இழந்த சீதாலட்சுமி துயரம்

விடியா இருளில் விலங்கால் பிணிக்கும்
விதியே எனக்குப் பகையா?
நெடுநாள் கணவர் நிழலாய் இருந்து
நெஞ்சால் அணைத்தல் மிகையா?
கொடியே அறுந்து தரைமேல் விழுந்து
குலைந்தால் அழகு தருமா?
அடியாள் கணவர் அடிமேல் வணங்க
அழியா வரமும் வருமா?

முதலே இழந்து முடிவே குலைந்து
முகிலே வெளுத்த முகமா?
சதையே எரிந்து தணலே மிகுந்து
சருகே விளைந்த சுகமா?
விதையே சினந்து நிலமே வெறுத்து
விரைவாய் நடத்தல் தகுமா?
கதையே மறந்து கவியே புனைந்து
கலையே பிறந்து நகுமா?

சுடுமே இளமை! கெடுமே பருவம்!
துணையே! இதுவும் சதியா?
வடுவே மனத்தில்! விழியோ குளத்தில்!
மனைமேல் துயர நதியா?
நடுவே நிறுத்த விரும்பா தொதுக்கும்
நரியால் முடங்கி அழவா?
படிமேல் இருந்து மடியால் இரந்து
பரிவால் தினமும் தொழவா?

குழந்தை அரங்கநாதன் அம்மாவுக்கு ஆறுதல்

''அம்மா சிந்தும் கண்ணீரே
அண்டா நிறையும் தண்ணீரோ?
அம்மா வாங்கும் பெருமூச்சு
அம்மிக் கல்லும் சுடலாச்சு!
அம்மா துன்பம் தூணாச்சு
அதனால் உடம்பும் துரும்பாச்சு!
அம்மா தூக்கம் போயாச்சு
அழகாய்ச் சிரித்து நாளாச்சு!

அம்மா! அம்மா! என்னைப்பார்!
அடுப்பைக் கண்ணால் நனைக்காதே!
அம்மா! அம்மா! என்னைப்பார்!
ஆறு வயது சிங்கம்நான்!
அம்மா! அம்மா! கலங்காதே!
அழுத கண்ணைத் துடைக்கின்றேன்!
அம்மா அந்த வானத்தை
அழைத்தே உன்முன் நிறுத்திடுவேன்!

என்மேல் உனக்கா சந்தேகம்?
இருந்தால் வீழும் என்தேகம்!
மண்ணை அள்ளி விழுங்கிடவா?
மரத்தின் உச்சி நான்தொடவா?
கண்ணை மூடி ஓடிடவா?
காட்டுக் குள்ளே போய்வரவா?
சின்னஞ் சிறுவன் என்றென்னைச்
சிறிதும் குறைத்து மதிக்காதே!

நாளை உனக்கு நலம்தருவேன்!
நல்ல நல்ல வளம்தருவேன்!
தோளை நிமிர்த்தி நடஅம்மா!
தூ!தூ! என்றே சொல்லம்மா!
தாளை வணங்கித் துயர்ஓடும்!
தரணி உன்னைக் கொண்டாடும்!
காளை வயது வரும்போது
காட்டு வேன்என் திறம்!''என்றான்.

தாயின் மகிழ்ச்சி

''புலிக்குப் பிறந்த மகனே! குடும்பம்
புயலில் நடக்கும் தினமே! இந்த
நிலைக்கு வருந்திக் களைத்துக் கிடந்தேன்
கனிவாய் மொழியால் கலக்கம் ஒழித்தாய்!
முளைக்கும் பொழுதே முகத்தில் மலர்ச்சி!
முயற்சி விதையை முனைந்து விதைத்தாய்!
களைக்கும் வரைக்கும் காத்திருக்காமல்
கசப்பை மறக்க எழுவோம்!''என்றாள்.

அரங்கநாதன் பாட்டி இல்லம் செல்லுதல்

மூத்தமகன் ஒருகையைப் பிடித்துக் கொண்டான்
முந்தானை இளையமகன் பிடித்துக் கொண்டான்!
பார்த்திருந்த பெண்குழந்தை இடுப்பில் ஏறிப்
பக்குவமாய் அமர்ந்துகொண்டாள்! கால மெல்லாம்
சேர்த்திருந்த கனவுகளை அள்ளிக் கொண்டே
சீர்காழி ஊர்நோக்கிச் செல்லு கின்றாள்!
காத்திருந்த தாய்வீட்டார் மகளின் கண்ணில்
கண்ணீரைத் துடைத்தபடி ஏற்றுக் கொண்டார்!

பாட்டியின் பாசம்!

பாட்டி மடியில் படுத்துக் கொண்டான்
பழைய கதைகள் கேட்டுக் கொண்டான்!
ஊட்டும் போதும் உறங்கும் போதும்
உயர்ந்தோர் வாழ்வை உரைத்தாள் பாட்டி!

தலையை வாரித் திலகம் இட்டாள்
சட்டை போட்டு முத்தம் இட்டாள்!
உலையில் சேர்க்கும் அரிசி போல
ஊரில் இருந்த பள்ளி சேர்த்தாள்!

தெருவில் நடக்கும் சிறுவன் அழகைச்
சிலைபோல் நின்று தினமும் பார்த்தாள்!
திரும்பி வீடு வந்த போது
திரட்டி வந்த பாடம் சொன்னான்!

கேட்டுக் கேட்டு மகிழ்ந்து போனாள்!
கிழவி கூடக் குமரி ஆனாள்!
ஆட்டம் போடும் வேளை கூட
அறிவை வளர்க்கும் கேள்வி கேட்டாள்!

மாமனின் பரிவு

''வாடா என்றன் மருமகனே!
வாடாப் பூவே கல்விப்பூ!
ஓடாச் செல்வம் இதுவொன்றே
ஓடிச் சென்று பிடித்துக்கொள்!
மூடா என்று சொல்லுமுன்னே
மூடா நெஞ்சால் படித்துக்கொள்!
போடா விரைந்து குழந்தாய்நீ!
பொன்னும் மண்ணும் ஈடில்லை!''

பள்ளி ஆசான் தாய்மாமன்
படித்துப் படித்துச் சொல்லுகிறான்!
''வெள்ளைத் துணியில் கறைபட்டால்
விலகு வதில்லை எளிதாக!
பிள்ளைப் பருவம் பாழ்பட்டால்
பின்னால் வாழ்வில் ஒளியில்லை!
கொள்ளை யிடுவாய் கல்வியினைக்
கூவிக் கூவி அழைக்கின்றேன்!''

மாமா சொல்லே அமிழ்தென்று
மனத்தில் உறுதி செய்தானே!
சீமான் செல்லும் பல்லக்கும்
சிறந்தோர் முன்னால் பணிகிறது!
கோமான் ஆளும் கோட்டையிலும்
கொடிதான் கல்வி எனநம்பித்
தேமாங் கனிபோல் உண்ணுகிறான்
தினமும் பாடம் பண்ணுகிறான்!

அரங்க நாதன் பள்ளியிலே
அழுது வடிந்த நாளில்லை!
பிரம்பு தொட்ட நாளில்லை!
பிழைகள் செய்த நாளில்லை!
வரம்பு கெடுத்த நாளில்லை!
வன்சொல் கேட்ட நாளில்லை!
கரம்புக் காடா அவன்நெஞ்சம்?
கரும்புச் சோலை அவனன்றோ?

அரங்க நாதனுக்கு நோய்களின் தொல்லை!

சோதனை இவனைச் சூழ்ந்து
தொடலாமா என்று கேட்கும்!
வேதனை வந்து வந்து
விளையாட அழைக்கும்! இந்தப்
பாதகம் கண்ட தாயார்
பாட்டியார் பதறி னார்கள்!
மோதுவேன் எதையும் என்று
முழங்கினான் அரங்க நாதன்!

நீலவான் பார்த்துப் பார்த்து
நெஞ்சினை விரிவு செய்தான்!
காலமே வியக்கு மாறு
கடமையைச் சரியாய்ச் செய்தான்!
பாலகன் என்று கூடப்
பரிதாபம் பார்த்தி டாமல்
மூலநோய் அணைத்துக் கொண்டு
முத்தமே கொடுக்கக் கண்டான்!

வாகைதான் வீரன் உண்ணும்
வாய்ச்சோறு! வாழ்க்கைச் சாறு!
வேகமாய் நின்ற வீரன்
விலாப்புறம் பாய்ந்த வேலாய்
சோகைநோய் அரங்க நாதன்
தோளிலே தொற்றிக் கொள்ளும்!
தோகைக்கு நோய்கள் வந்தால்
சோர்ந்திடா மயில்தான் உண்டா?

நெடுநேரம் படிக்கும் போக்கு
நீடிக்க வழியே இன்றிக்
கொடுநோயால் அரங்க நாதன்
குறுகினான்! சோர்ந்தான்! ஆனால்
அடிவாங்கும் பந்து மட்டும்
அழுகையைத் தொடங்கி டாது!
முடிவாய்ஓர் உறுதி செய்தான்
மூலையில் முடங்கி டாமல்!

நண்பனை அழைத்தான்! பாடம்
நன்றாகப் படிக்கச் சொன்னான்!
ஒன்றையும் விடாமல் கேட்டான்
உள்ளத்தில் வாங்கி வைத்தான்!
மண்டிய ஆர்வம் நெஞ்சில்
மலையென இருந்த தாலே
அண்டிய நோய்கள் எல்லாம்
அஞ்சியே கிடக்க வைத்தான்!

அரங்க நாதனின் தன்னம்பிக்கை!

முடியும்! முடியும்! முடியும்! எனவே
முயற்சி தொடங்கிடுவேன்! - கல்வி
படியும்! படியும்! படியும்! எனவே
பாடம் படித்திடுவேன்!

விலகும்! விலகும்! விலகும்! துயரம்
விரைவில் கலைந்துவிடும்! - நாளை
மலரும்! மலரும்! மலரும்! மகிழ்ச்சி
மலர்கள் மணந்துவரும்!

நடப்பேன்! நடப்பேன்! நடப்பேன்! மனத்தினில்
நம்பிக்கை விடமாட்டேன்! - இருளைக்
கடப்பேன்! கடப்பேன்! கடப்பேன்! புயலில்
கடமை விடமாட்டேன்!

மழையும் வெயிலும் மனிதரை வாட்டும்
வழக்கம் இருந்தாலும் - அந்த
மழையால் வெயிலால் மனிதர்கள் வாழ்ந்த
வகையும் தெளிவாகும்!

உடலின் பிணிகள், உயரப் பறக்க
ஒருதடை ஆகிடுமோ? - ஆசைக்
கடலின் அலைகள் கரையை அடையக்
கடும்பணி ஆற்றிடுமே!

நெஞ்சினை நெருங்க முடியாத நோய்கள்!

சிறுவனின் எண்ணம் நறுந்தேனின் கூட்டம்!
பொறுமையும் திண்மையும் பூத்த - நறுமலர்
கண்டவர் வாழ்த்தினார்! கற்றவர் போற்றினார்
சுண்டுவிரல் தாழ்வதுண்டா சொல்?

(வளரும்)

ஆசிரியர் எழுத்தாளருக்கு நல் வாய்ப்பு

நீங்கள் பள்ளியில் பணி செய்யும் ஆசிரியரா? நீங்கள் பத்திரிகையில் எழுத விரும்புகிறீர்களா?

உங்களுக்கு புத்தகம் எழுத வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா?

உங்களைப் போல் ஆசிரியராகவும் எழுதாளராகவும் விளங்க வேண்டும் என்று நினைப்பவருக்காக ஒரு கூட்டம் சென்னை கிருஸ்து சர்ச் பள்ளி, மவுண்ட் ரோடில் மார்ச் மாதத்தில் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் ஜான் பிரட்டி வரவேற்றார்.

திருமதி பிரேமாவதி ராஜன்

Inspectrers of Indian School.

தலைமை வகித்து சிறந்த நூல்கள் எழுதுவதற்கு முன்வர வேண்டுமென்றார்.

திருமதி மெஹருனிஸா ஆங்கிலத்தில் புலமை பெற்ற கல்வி அறிஞர் பேசும் போது வகுப்புகளில் நூலகம் அமைக்க வேண்டும். மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் குறையாது ஒரு புத்தகமாகவது படிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

திரு பாலகிருஷ்ணர், நன்றி கூறினார்.

திரு A.G.S. மாரி ஆசிரியர் எழுத்தாளர் தேவையான தேதிகளில் ஆடியோ வீடியோ நூலகம் ஏற்படுத்த விரும்புவதாகத் தெரிவித்தார்.

♣ Edited, printed and published by **NOOLAGAGNANI** Dr. Pa. PERUMAL M.A., M.Lib Sc, Ph.D., from 6, Mu.Va. Street, Arumbakkam, MADRAS - 600 106. Phone No. 484 50 34. ♣ Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS - 600 029. ♣ Laser by Galaxy Computer System. Phone 483 25 71. ♣

Please send Annual subscription RS:120 -



திருமண நாள் 9 - 9 - 1959 இல்
டாக்டர். பெருமாள் திருமதி. இந்திரா

1 - 7 - 1993 இல் டாக்டர் பெருமாள்
திருமதி. இந்திரா, 58 வயதில்